# பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுவது எப்படி

**அஸ்திபார சத்தியம் தொகுப்பு 10**

**பீட்டர் டான்**

© பதிப்பு உரிமை 2008 பீட்டர் டான் சுவிசேஷம். எல்லா உரிமைகளும் முன்பதிவு செய்யப்பட்டவை. பதிப்பாளரின் அனுமதியை வரிவடிவில் பெற்றாலன்றி இப்புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பிறமொழியாக்கம் செய்யவோ, துண்டு பிரசுரம் செய்யவோ, நகல் எடுக்கவோ, அச்சிடவோ, வேறு எவ்விதத்திலும் பயன்படுத்தவோ கூடாது.

இந்தப் புத்தகத்தின் pdf நகல் ஒன்றின் விலை A$10 ஆகும். விலை கொடுத்து இப்புத்தகத்தை வாங்க முடியாதவர்கள், ஆசீர்வதிக்கப்படவும் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், இதை இலவசமாக கொடுக்கிறோம். எங்களது ஊழியம் தொடர்ந்து நடைபெற, உங்களால் முடிந்த பொருளாதார உதவியை நன்கொடையாக அனுப்புங்கள்.

உங்களது நன்கொடைகளை paypal வழியாக elshaddai1@bigpond.comக்கு அனுப்புங்கள். வேறு எந்த வழியிலும் உங்களது நன்கொடைகளை அனுப்ப தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

Peter Tan Evangelism
PO Box 27
Belconnen
ACT 2616, Australia.

Tel.: 00614 17755613
Email: elshaddai1@bigpond.com

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

# முகவுரை

அநேக வருடங்களாக கிறிஸ்தவர்களுக்கு ஆலோசனை கூறியதிலிருந்தும் பகிர்ந்து கொண்டதிலிருந்தும், என்னிடத்தில் மிகவும் அடிக்கடி கேட்கப்பட்ட கேள்வியாக நான் கண்டுபிடித்தது என்னவெனில், "தேவசித்தத்தை நான் அறிந்துகொள்வதெப்படி?" என்பது தான். எண்ணமுடியாத ஆயிரக்கணக்கான உண்மையான பசிதாகமுள்ள கிறிஸ்தவர்கள், தங்களது வாழ்க்கைக்காக தேவனது பரிபூரண சித்தத்தை அறிந்துகொள்ள வாஞ்சித்து நாடுகின்றனர்.

தேவனுடைய பரிபூரண சித்தத்தால் இலகுவாக கடந்துசெல்வதின் திறவுகோல், பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுவதைக் கற்றுக்கொள்வதுதான் (ரோம. 8:14). ஆவியானவரின் நடத்துதல், ஐந்து உள்ளான சாட்சிகளிலும், மனித ஆவியின் சத்தத்திலும், பரிசுத்த ஆவியானவரின் சத்தத்திலும் உள்ளது. இந்த ஒவ்வொரு பகுதிகளும் கற்றுக்கொள்ளப் பட்டு, பெற்றுக்கொள்ளப்பட முடியும்.

பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுவதில் நாம் வளரும்பொழுது, நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சத்தத்தைக் கேட்கும் ஆடுகளாக, நாம் வளர்ச்சி அடைவோம் (யோவா. 10:22).

அவருடைய பரிபூரண சித்தமாகிய ஆற்றில் மிதக்க, தேவன் தாமே அவரது கிருபை யாலும் இரக்கத்தாலும் நம்மை பெலப்படுத்துவாராக.

பாஸ்டர் **பீட்டர் டான்**

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

# அத்தியாயம் 1
# உள்ளான சாட்சி

பரிசுத்த ஆவியானவர் நம்மோடு பலவழிகளில் பேசுகிறார். ஆனால், மிகவும் முக்கியமான அடிப்படை வழியாக, பரிசுத்த ஆவியானவர் உள்ளான சாட்சியினால்தான் நம்மை நடத்துகிறார். நமது வாழ்வில் தொன்னூற்றைந்து சதவீத நடத்துதல்களை உள்ளான சாட்சியினால்தான் பரிசுத்த ஆவியானவர் நடத்துகிறார். தரிசனங்களையும் தீர்க்கதரிசனங்ளையும், உறுதிப்படுத்துதல்களாகவே அவர் நமது வாழ்வில் கொடுக்கிறார். எனினும் நாம் உள்ளான சாட்சியினால்தான் நடத்தப்பட வேண்டும். ஐந்துவகை ஊழியங்களில் இருப்பவர்கள் கூட, உள்ளான சாட்சியினால் நடத்தப்படக் கற்றுக்கொள்ள வேண்டும்.

எல்லா ஐந்துவகை ஊழியர்களும் சும்மா உட்கார்ந்து, ஒவ்வொரு நாளும் தரிசனங்களை காண்பதாக சிலர் நினைக்கின்றனர். அவர்களது ஊழியங்களில் கண்கவரும் வகையில் அவர்கள் செயல்பட்டாலும், வாழ்வின் பல அனுதின அலுவல்களில் உள்ளான சாட்சிக்கு உணர்வுள்ளவர்களாய் இருக்கவே தேவன் அவர்களை எதிர்பார்க்கிறார். ஜனங்கள் எப்போதுமே கண்கவரும் நிகழ்ச்சிகளை இயற்கைக்கு அப்பாற்பட்டதோடு சமப்படுத்தி உள்ளனர். ஆனால், இயற்கைக்கப்பாற்பட்டது கண்கவருவதாக இருக்க வேண்டியதில்லை. உதாரணமாக, அனுதினமும் நாம் விரும்பும்போதெல்லாம் அந்நியபாஷைகளில் பேசுவது, நமக்கு இயற்கைக்கப்பாற்பட்ட செயலே. ஆனால், அது கண்கவருவதாக இருப்பதில்லை.

### *உள்ளான சாட்சியின் வரையறை*

உள்ளான சாட்சி என்பது, நமது புதிய பிறப்பின் ஆவி மனிதனில் உண்டாகும் ஆவிக்குரிய உணர்வாகும். நாம் மறுபடியும் பிறக்கும்போது, நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று, பரிசுத்த ஆவியானவர் நமது ஆவியோடே சாட்சிகொடுக்கிறார் (ரோம. 8:16). நாம் மறுபடியும் பிறந்தபிறகு, பரிசுத்த ஆவியானவர் நமது புது பிறப்பின் ஆவிகள் மூலமாக, நமது ஆவிகளில் வாழ்ந்து, மீதமுள்ள நமது வாழ்நாளெல்லாம் நம்மை நடத்துகிறார் (எசே. 36:26, 27). இயேசு நமக்காக மறுபடியும் வரும்வரையில், நாம் அவருடைய பாதுகாப்பின் கீழ் இருக்கிறோம் (எபே. 1:13, 14).

உள்ளான சாட்சி என்பது, உள்ளான அபிஷேகம் என்றும் அழைக்கப்படுகிறது. உள்ளே உள்ள அபிஷேகம் நமக்குப் போதித்து, எல்லாக் காரியங்களிலும் நம்மை நடத்துகிறது (1 யோவா. 2:27) இந்த உள்ளான அபிஷேகத்தின் வெளிப்படுத்துதல் உண்டாக்குகிற உணர்வையே, உள்ளான சாட்சி என்று நாம் அழைக்கிறோம். ஒரு அர்த்தத்தில், உள்ளான அபிஷேகம் என்பது, பெரிதும் பயங்கரமுமான வனாந்திரத்தில், இஸ்ரவேல் ஜனங்கள் வழி நடத்தப்பட்டபோது, பகலில் மேகஸ்தம்பத்தினாலும் இரவில் அக்கினிஸ்தம்பத்திலும் வழி நடத்தப்பட்டதற்கு ஒப்பானதாகும் (எண். 9:15–23; உபா. 8:15). தெளிவான வித்தியாசம் என்னவெனில், பழைய ஏற்பாட்டில் வழிநடத்தப்படுவது வெளிப்படையானது, ஆனால் புதிய ஏற்பாட்டில் வழிநடத்தப்படுவது உள்ளானது.

உள்ளான சாட்சியின் அடிப்படை உணர்வானது, சரியா அல்லது தவறா என்ற உணர்வும் மற்றும் சிகப்பு அல்லது பச்சை விளக்கைப் போன்றதுமாகும். அதுமட்டுமல்லாமல் இந்த ஆவிக்குரிய உணர்விற்கு ஐந்து மாறுபடுதல்கள் உள்ளன. ஒரு காரியத்தின் சரியான தன்மை அல்லது தவறான தன்மைக்கு, சாட்சி கொடுக்கும் மனசாட்சியின் வேலையுமாகும் (ரோம. 9:1). அவ்விதமாகவே, பவுல் தேவனை தனது ஆவியில் சேவித்தார். பவுல் தனது மனசாட்சியோடும் தேவனை சேவித்தார் (2 தீமோ. 1:3; ரோம. 1:9). நமது உள்ளான சாட்சியும், மனசாட்சியும் பயிற்றுவிக்கப்படக் கூடியதே.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

நமது ஆவிமனிதனின் ஆவிக்குரிய உணர்வுகள், நன்மை தீமை இன்னதென்று பகுத்தறிய பயிற்றுவிக்கப்பட முடியும் (எபி. 5:14). மனசாட்சியானது தேவ வார்த்தையினால் பயிற்சிவிக்கப்பட்டு வழிநடத்தப்பட வேண்டும். மனசாட்சியானது சூடுண்ட நிலைக்கும், பாவத்தினாலும் அநீதியினாலும் மரித்துப்போகும் நிலைக்கும் செல்லக்கூடிய, மிகவும் மென்மையானதாகும் (1 தீமோ. 4:2). நாம் மறுபடியும் பிறந்தபோது, இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலே நமது மனசாட்சியானது பழைய சீர் நிலைக்கு கொண்டு வரப்பட்டது (எபி. 10:12). அதுமுதல், பவுலைப்போல சுத்த மனசாட்சியோடு நமது வாழ்க்கையை வாழ வேண்டும்.

நாம் யூகித்து நடக்காமல் நமது விசுவாச நிலையில் நாம் செயல்பட, மனசாட்சியானது நமது விசுவாசத்தோடே சேர்ந்து வேலை செய்கிறது. யூகத்தில் செயல்படுவதென்பது, நமக்கு விசுவாசமில்லாத ஒன்றின்மேல் செயல்படுவதாகும். நமது விசுவாச அளவை அளக்கும் கருவியே நமது மனசாட்சியாகும். நமது விசுவாச அளவிற்கு அப்பாற்பட்டு நாம் செயல்படுகிறோமா என்று அது நமக்குச் சொல்கிறது. தங்களது விசுவாச மற்றும் வெளிப் பாட்டு அளவில் வழி நடக்காதவர்கள், தங்களது மனசாட்சியை அசுசிப்படுத்துகிறார்கள் என்று பவுல் கொரிந்தியருக்கு சொன்னார் (1 கொரி. 8:7). முதலாம் கொரிந்தியரில் விக்கிர கங்களுக்கு படைக்கப்பட்ட உணவைப்பற்றி பவுல் பேசினாலும், மனசாட்சியினால் வழி நடத்தப்பட்டு, நமது தனிப்பட்ட விசுவாச நிலையில் செயல்படும் கொள்கையானது, நமது வாழ்வில் எல்லா அம்சங்களுக்கும் பொருந்தும் என்று சொல்கிறார். சுத்தமனசாட்சியிலுள்ள விசுவாசத்தின் இரகசியத்தை காத்துக்கொள்ள நாம் கற்றுக் கொள்ள வேண்டும், இல்லாவிட்டால் நாம் கப்பற்சேதத்திற்குள்ளாவோம் (1 தீமோ. 1:19; 3:9).

### *ஆவி மனிதனின் ஐந்து உணர்வுகள்*

ஆவிமனிதனில் செயல்படும் உள்ளான சாட்சியைப் பற்றி, புதிய ஏற்பாட்டில் ஐந்து நிகழ்ச்சிகள் உள்ளன. இவைகளில் ஒவ்வொன்றும் உள்ளான சாட்சிக்கு சாட்சிகொடுக்கும் ஐந்து பகுதிகளை செயல்முறைப்படுத்திக் காண்பிக்கிறது. உள்ளான சாட்சி செயல்படும் வித்தியாசமான நிலைகள் உள்ளன. இந்த உள்ளான சாட்சியின் வித்தியாசமான நிலை களுக்கு நாம் உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

பரிசேயர்களோடு இயேசு உரையாடிக்கொண்டிருந்தபோது, அவர் ஆவியிலே பெரு மூச்சுவிட்டார் (மாற். 8:12). அவரது ஆவி மனிதனில் ஏதோ ஒன்று தெளிவாக நடைபெற்றது. 'பெருமூச்சு விட்டார்' என்ற வார்த்தை *'stenazo'* 'ஸ்டெனாசோ' என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது. ஊமையும் செவிடுமான மனிதனுக்கு ஜெபித்த பொழுதும், இதே வார்த்தையைத்தான் இயேசு பயன்படுத்தினார். இயேசு வானத்தை அண்ணாந்து பார்த்து பெருமூச்சுவிட்டார். 'திறக்கப்படுவாயாக' என்று இயேசு பேசினபோது, அந்த மனிதன் சுகமானான் (மாற். 7:34).

*'Stenazo'* 'ஸ்டெனாசோ' என்ற வார்த்தை 'தவித்தல்' என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது (ரோம. 8:23; 2 கொரி. 5:2, 4). ரோமருக்கு எழுதின நிருபத்தின் சூழ்நிலையில் இருந்து, தவித்தல் என்ற வார்த்தை ஜெபத்தோடு சம்பந்தப்பட்டுள்ளது என்பது மிகவும் தெளிவாகிறது. ஆவி மனிதனோடு சம்பந்தப்படுத்தி *'Stenazo'* 'ஸ்டெனாசோ' என்ற வார்த்தை வரும்பொழுது, பரிசுத்த ஆவியானவர் பகிர்ந்தளிக்கும் ஜெப பாரத்தையே அது பேசுகிறது. எனவே, உள்ளன சாட்சியின் முதலாவது உணர்வு ஜெபிப்பதற்கான உணர்வே ஆகும்.

லாசருவுக்காக மரியாளும் யூதர்களும் அழுததை அவர் பார்த்தபோது, இயேசுவும் தனது ஆவியிலே தவித்தார் (யோவா. 11:33, 38). எனினும் 'தவித்தார்' என்ற வார்த்தை, உள்ளான

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

சாட்சியின் முதலாவது உணர்வைப்போல, அதே வார்த்தையிலிருந்து வரவில்லை. இந்தப் பகுதியில் வரும் கிரேக்க வார்த்தையானது *'embrimaomai'* 'எம்ப்ரிமாவோமாய்' முற்றிலும் வித்தியாசமான அர்த்தத்தோடு வருகிறது. 'எம்ப்ரிமாவோமாய்' என்பது 'கண்டிப்பான எச்சரிப்பு' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (மத். 9:30; மாற். 1:43; 8:30). சுகமானவர்கள் தங்கள் சுகத்தை விளம்பரப்படுத்த வேண்டாமென்று இயேசு கண்டிப்பாய் எச்சரித்தார். ஏனெனில், மிகவும் அதிகமான பிரபல்யம், அவர் பிரசங்கிக்க விரும்பிய பட்டணங்களுக்குள் அவர் செல்வதை தடுத்துவிடும். அவரது கட்டளைகளுக்கு செவிகொடாமற்போனபோது, இயேசு அந்தப் பட்டணத்திற்குள்ளே போகக்கூடாதபடி வந்த கூட்டம் மிகவும் பெரிதா யிருந்தது (மாற். 1:45). 'எம்ப்ரிமாவோமாய்' என்பது அதிகார தொனியில் பேசுவதாகும்.

இந்தப் பகுதியின் அடிப்படையில், லாசருவின் கல்லறையில் இயேசு அனுபவித்தது வெறும் கவலை மட்டுமல்ல. இயேசு அதோடு அதிகாரத்தையும் சேர்த்து அனுபவித்தார். அவரது ஆவியிலிருந்த அதிகார உணர்வுதான் அது. அந்த சூழ்நிலையின்மேல் அதிகாரத்தை எடுக்க, பரிசுத்த ஆவியானவரின் விசேஷித்த அபிஷேகத்தை அவர் உணர்ந்தார். "லாசருவே வெளியே வா" என்று, கல்லறையிலே இயேசு அதிகாரமான பலத்த சத்தத்தோடு கூப்பிட்டார். உடனே லாசரு எழுந்து தனது கல்லறை துணிகளோடு வெளியே வந்தார்.

ஆவி மனிதனின் இரண்டாவது உணர்வு, ஒரு சூழ்நிலையின்மேல் அதிகாரத்தை எடுக்கும் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல் ஆகும். பிசாசுகளைத் துரத்துவதிலும், சுகமாக்கும் ஊழியத்திலும் இது எப்போதுமே உணரப்பட்டது. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தோடு உறுதியாக நடத்தப்பட்டு ஊழியம் செய்ய விரும்பும் ஒவ்வொருவரும், பிசாசுகள் மற்றும் வியாதிகள் மேல் அதிகாரத்தை எடுக்கும் முன்பு, ஆவிமனிதனில் இந்த இரண்டாவது உணர்வை உணரவேண்டும்.

இயேசு தனது சீஷர்களோடு பேசிக்கொண்டிருந்தபோது, தனது ஆவியிலே கலங்கினார் (யோவா. 13:21). 'கலங்கினார்' என்ற வார்த்தை *'tarasso'* 'டராசோ' என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது. இயேசு பேசிக்கொண்டிருந்த அந்த சமயத்தில் தானே, நம்பிக்கை துரோகம் நடைபெறுவதை அவர் உணர்ந்தார் (யோவா. 13:21). ஆவி மனிதனின் இந்த மூன்றாம் உணர்வு என்பது, முன்பே உண்டாகும் எச்சரிப்பின் உணர்வாகும். இந்த வார்த்தையானது, அணுசக்தி யுத்த செயல்திட்டத்தில், எதிர் தரப்பு தேசத்தினால் முதலாவது குண்டுகள் போடப்படும் சாத்தியக்கூறின் ஆரம்ப எச்சரிப்பாகும். வரக்காத்திருக்கும் அபாயங்களை இயற்கைக்கப்பாற்பட்ட நிலையில் ஆவி மனிதன் மூலமாக அறிந்துகொள்ள, தேவன் நமக்குள் உருவாக்கிவைத்திருக்கும் ஆரம்ப எச்சரிப்பாகும். கிறிஸ்தவர்களுக்கு தெரியாத நிலையில், சாத்தான் ஒரு ஆச்சர்யத்தை அவர்களுக்கு கொடுக்க முடியாது. நடைபெறுவதற்கு முன்பாகவே, சாத்தான் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியையும் இயேசு அறிந்திருந்தார். அவரது ஆவிமனிதனில் செயல்பட்ட பரிசுத்த ஆவியானவருக்கு அவர் உணர்வுள்ளவராயிருந்தார்.

மூன்றாவது உணர்வு, ஆவிமனிதனுக்குள் கவலையின் கலக்கத்தைப் போலிருக்கும். நமக்கு விரோதமாக சத்துரு கொண்டுவரும் ஆலோசனை செயல்திட்டங்களுக்காக நம்மை எச்சரிப்பதே அதன் நோக்கமாகும். இந்த உணர்வுக்குச் சரியான பிரதி கிரியை என்ன வெனில், ஜெபத்தினாலும் மன்றாட்டினாலும் ஆவிக்குரிய யுத்தத்தை ஆரம்பிப்பதேயாகும். தனது ஆவி மனிதனில் இயேசு இந்த உணர்வைப் பெற்றுக்கொண்ட பிறகு, அவர் ஆழமான ஒரு ஜெபத்திற்குள்ளாய் கடந்து சென்றார். அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளைப்போல தரையில் விழும் வரை இயேசு ஜெபித்தார் (லூக். 22:44). அவரது ஜெபங்களினால் ஒரு ஊடுருவலை ஆவி மண்டலத்தில் அவர் பெற்றுக்கொண்டார் (எபி. 5:7; லூக். 22:43). இந்த மூன்றாம் உணர்வு, அபாய மணியைப்போல செயல்படுகிறது. உடனடியான மன்றாட்டு மற்றும் ஆவிக்குரிய யுத்தத்தின் ஒரு பெரிய தேவைக்காக நமது கவனத்தை அது ஈர்க்கிறது.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

பவுல் அத்தேனே பட்டணத்தில் வந்தபோது, அந்தப் பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டு, தன் ஆவியிலே மிகுந்த வைராக்கியமடைந்தான் (அப். 17:16). 'மிகுந்த வைராக்கியம்' என்ற வார்த்தை *'paroxunomai'* 'பெராக்ஸ்னோமாய்' என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது. தனது ஆவி மனிதனில், பவுல் முற்போக்கான ஒரு எழுச்சியை அனுபவித்தார். ஆவி மனிதனின் நான்காம் உணர்வு, ஒரு ஊழியருக்கு முற்போக்கான எழுச்சியாகும். மூன்றாம் உணர்வைவிட இது வித்தியாசமானதாகும். நான்காம் உணர்வு, பரவசத்தையும் நல் வைராக்கியத்தையும் கொண்டது. ஆனால், மூன்றாம் உணர்வோ கலக்கமடையும் தன்மையுடையது. இந்த முற்போக்கான எழுச்சியை உணர்ந்த பிறகு, தேவ வசனத்தை பிரசங்கிக்கவும் போதிக்கவும் பவுல் ஜெப ஆலயத்திற் கும் சந்தைவெளிகளுக்கும் சென்றார் (அப். 17:17). உள்ளான சாட்சியின் நான்காம் உணர்வு, தேவனுடைய வேலையை செய்வதற்காக, ஆவி மனிதனில் ஏற்படும் பொங்கி வழிதலைப் போன்றது. இந்த உணர்வுக்குக் கீழ்ப்படியாவிட்டால், ஆவியானவர் அவித்துப் போடப்படுகிறார் (1 தெச. 5:19).

பிறகு பவுல் கொரிந்து பட்டணத்திற்குச் சென்றபோது, அவர் உள்ளான சாட்சியின் உறுதியான உணர்வை அனுபவித்தார். பரிசுத்த ஆவியானவரால் நெருக்கி ஏவப்பட்டார் (அப். 18:5). சில மொழிபெயர்ப்புகளில் ஆவியானவர் என்று குறிப்பிடப்படாததால், பவுலின் ஆவியினுடைய ஈடுபாட்டை காண்பிக்கிறது. இதுதான் ஐந்தாவதும் மிகவும் உறுதியானது மான உணர்வாகும். இது நான்காம் உணர்வைப்போலவே அதிகமாக காணப்பட்டாலும், பெலத்திலும் உறுதியிலும் பல மடங்கு பெருகி இருக்கும். பரிசுத்த ஆவியானவரின் வெளிப்படுத்துதலின் வரங்களினால், தேவனுடைய ஒரு வேலையை செய்து முடிக்க உண்டாகும் எழுச்சியாகும். நான்காம் உணர்வு ஐந்தாம் உணர்வைப் போலல்லாது, பரிசுத்த ஆவியானவரினுடைய வரங்களின் வெளிப்படுத்துதல் இல்லாமல், தேவனுடைய ஒரு வேலையை செய்து முடிக்க உண்டாகும் எழுச்சியாகும்.

கொரிந்து பட்டணத்திலே பவுல் ஏறக்குறைய ஒரு வருடமும் ஆறு மாதமும் தங்கி இருந்தார் (அப். 18:11). அங்கு தங்கி தைரியமாய் ஊழியம் செய்யும்படி, இயேசுவும் அவருக்கு தரிசனமாகி அவரை உற்சாகப்படுத்தினார் (அப். 18:9, 10). கொரிந்தியருக்கு பவுல் செய்த ஊழியத்திலே, வல்லமையான அடையாளங்களும் அற்புதங்களும் செய்து முடிக்கப்பட்டன (2 கொரி. 12:12). 'நெருக்கி ஏவுதல்' என்ற வார்த்தை *'sunecho'* 'சுனெக்கோ' என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது. இது அமுக்கப்படுதல் அல்லது ஒன்று சேர்ந்திருத்தலைக் குறிக்கிறது. மேலுள்ள அபிஷேகம் வெளிப்படுதலில் இருக்கும் போதெல்லாம், இந்த உணர்வு எப்பொழுதுமே இருக்கும்.

ஆவிக்குரிய பயிற்சி இல்லாதவர்கள், ஆவிமனிதனின் இந்த ஐந்து உணர்வுகளையும் தெளிவாக உணர முடியாதவர்களாயிருக்கிறார்கள். தேவ வசனம் மற்றும் ஜெபத்தின் மூலமாக நமது ஆவிமனிதனை நாம் பயிற்றுவிப்பது அவசியமாயுள்ளது. ஆவி மனிதனின் இந்த அனுபவங்களுக்கு, ஜெபமும் உபவாசமும் ஒரு நபரின் உணர்வுத் தன்மையை பெருக்க முடியும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

## *அத்தியாயம் 2*

# மனித ஆவியின் சத்தம்

மனித ஆவியின் ஐந்து உணர்வுகளும், மனித ஆவியின் சத்தத்தை உண்டாக்குவதில்லை. அவைகள் பலவகையான உணர்வுகளுக்கு சம்பந்தப்பட்டதே. உணர்வுகள் ஏற்படும்பொழுது அறிவோ அல்லது விளங்கிக்கொள்ளுதலோ பகிர்ந்தளிக்கப் படுவதில்லை. அந்த உணர்வுகள் என்ன அர்த்தப்படுகிறது மற்றும் சம்மந்தப்படுகிறது என்பதை, போதனையின் மூலமாக, ஒரு நபரை பயிற்றுவித்து அவர் அதை விளங்கிக்கொள்ளச் செய்ய இயலும். உள்ளான சாட்சி புத்தி சார்ந்த நிலையில் ஒரு செய்தியையும் தெரிவிப்பதில்லை.

எனினும், ஆவி மனிதன் நமது ஆத்துமாக்களோடு தொடர்பு வைத்துக்கொள்ளும் ஆற்றலுள்ளது. மனித ஆவியின் சத்தத்தை நாம் பெற்றுக்கொள்வது, நமக்குள் இருக்கிற உள்ளான சத்தத்தைப் பெற்றுக்கொள்வதைப் போன்றதாகும். எனினும், ஆத்துமாவின் சத்தமும் நமக்குள் இருக்கிறது. நமது ஆவிகளும் நமது ஆத்துமாக்களும் நமது பௌதிக சரீரத்தில் வாழ்கின்றன. அவ்விதமாகவே, நமது ஆத்துமாவின் சத்தமானாலும் அல்லது நமது ஆவியின் சத்தமானாலும், இந்த சத்தங்களை உள்ளான சத்தமாகவே நாம் கேட்கிறோம். எனவே, ஆத்துமாவின் சத்தத்திலிருந்து ஆவியின் சத்தத்தை நாம் வித்தியாசப்படுத்த வேண்டிய அவசியமுள்ளது.

### *ஆத்துமாவிலிருந்து ஆவியை வித்தியாசப்படுத்துதல்*

ஆவியின் சத்தத்தையும் ஆத்துமாவின் சத்தத்தையும், உள்ளான எண்ணங்களாகவும் கற்பனைகளாகவும் நாம் 'கேட்கிறோம்'. ஆத்துமாவின் சத்தத்திலிருந்து ஆவியின் சத்தத்தை வித்தியாசப்படுத்தும் இந்தப் பெரிய வேலையானது, நாம் பெற்றுக்கொள்ளும் பல்வேறு வகையான எண்ணங்களையும் கற்பனைகளையும் வித்தியாசப்படுத்துவதிலுள்ளது. ஆவியின் சிந்தை என்று ஒன்றுள்ளது, ஆத்துமாவின் சிந்தை என்றும் ஒன்றுள்ளது. ஆவியினால் அறிந்துகொள்வதென்பது, சிந்தனையினால் அறிந்துகொள்வதைவிட மிகவும் மேலானதாகும் (1 கொரி. 2:11, 12, 14). ஆவியானவருடைய காரியங்களில் நமது சிந்தையை பதிக்க வேண்டுமேயன்றி, மாம்சத்தின் காரியங்களில் பதிக்கக்கூடாது (ரோம. 8:5–7).

உணர்வு நிலைகளில் *(consciousness)* மூன்று நிலைகள் உள்ளன: உணர்வினுடைய சிந்தையின் *(conscious mind)* வேலை, உள் உணர்வினுடைய சிந்தையின் *(sub-conscious mind)* வேலை மற்றும் ஆவியினுடைய சிந்தையின் வேலை. தூக்கத்தில் உணர்வின் இரண்டு முக்கிய படிகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்: Rapid Eye Movements (REM) and Non-Rapid Eye Movements (NREM) அதிவேக கண் அசைவுகள், அதிவேகம் இல்லாத கண் அசைவுகள். இவைகள் இரண்டும் சிந்தையின் இரண்டு வேலைகளைக் குறிக்கின்றன. எனினும் ஆவியினுடைய சிந்தையின் விழிப்புணர்வு நிலை என்னும் மிகவும் உயர்ந்த உணர்வு நிலையை, விஞ்ஞானிகள் இன்னும் கண்டுபிடிக்க வேண்டியவர்களாய் உள்ளனர். இது ஆவி மட்டத்திலுள்ள உணர்வு நிலையாகும்.

இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தத்தின் பாதுகாப்பின்றி, ஆவி உணர்வு நிலைக்குள் நுழைய முனைபவர்கள், அசுத்த ஆவிகளுக்கு இரையாவார்கள். எல்லா தவறான துர் பக்தி மார்க்கத்தாரும் *(false cults)* மற்றும் மெய்ப்பொருளியல் மதங்களும் *(Metaphysical religions)* தவறான உபதேசங்களையும், அகிலத்தின் தவறான கொள்கைகளையும் பெற்றுக் கொள்வதில் முடிவடைகின்றனர். பவுல் இவைகளை பிசாசின் உபதேசங்கள் என்று கூறுகிறார் (1 தீமோ. 4:1). அவர்களுடைய 'வெளிப்பாடுகள்' என்று அழைக்கப்படுபவைகள்,

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

பரிசுத்தத்தையோ பக்தியையோ உருவாக்குவதில்லை. அவைகளில் அநேகம் துன்மார்க்கத்தில் முடிவடைகின்றன. அதோடு, மனித வாழ்வின் படு மோசமான நிலைகளில் அவர்கள் வாழ்கின்றனர்.

எங்கே போலி உள்ளதோ, அங்கே நிஜமானதும் உள்ளது. கிரியைகளினாலல்ல, இயேசு கிறிஸ்துவின் மீட்பின் மூலமாக நமக்கு திறக்கப்பட்ட, ஆவிக்குரிய உணர்வு நிலையின் உண்மைத்தன்மை ஒன்று உள்ளது. அது நமது வாழ்விலுள்ள தேவ பிரசன்னத்தின் உணர்வு நிலையே. அது பரிசுத்த ஆவியானவரால் நிறைந்து இருக்கும் நிலையே (எபே. 5:18, 19). இது 'ஆவியானவரின் காரியங்களில் கவனம் செலுத்தும்' நிலையாகும் (ரோம. 8:5). வெளிப்பிரகாரமான காரியங்களைப் பார்க்காமல், ஆனால் உள்ளான மனிதன் புதுப் பிக்கப்பட்டு, காணக்கூடாத ஆவியானவரின் காரியங்களை பார்த்து வாழ்வதை பற்றி பவுல் பேசுகிறார் (2 கொரி. 4:16–18).

ஆவி மனிதனின் உணர்வு நிலையில் வாழ்பவர்கள், ஆவியானவராலும் விசுவாசத்தினா லும் நிறைந்து இருக்கும் மனிதர்களே. இப்படிப்பட்ட விட்டுக் கொடுத்தலினாலே நிறைந்து இருப்பவர்கள், பரிசுத்த ஆவியானவரால் பலத்த பராக்கிரமமான காரியங்களை நிறைவேற்ற முடியும். ஸ்தேவான் ஜனங்களுக்குள்ளே பலத்த அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான் (அப். 6:8). அவர் உபத்திரவப்படுத்தப்பட்டு கல்லெறியப்படும்பொழுது, ஸ்தேவான் தன்னை உபத்திரவப்படுத்தினவர்களை விட, தேவனைப் பற்றியே அதிக உணர்வுள்ளவராய் இருந்தார் (அப். 7:54–56). கேத்தரின் குல்மேன் என்பவரின் மகா பெரிய இரகசியங்களில் ஒன்று, பரிசுத்த ஆவியானவருக்கு விட்டுக்கொடுத்ததும் அவரை உணர்ந்திருந்ததுமாகும். டாக்டர் பால் யோங்கிசோ தனது புத்தகங்களில் பரிசுத்த ஆவியானவரோடு நெருங்கி இருப்பதையும் அவரோடு பங்காளத்துவத்தில் இருப்பதையும் விவரிக்கிறார்.

எல்லா கிறிஸ்தவர்களும் கட்டுப்படுத்தப்பட்ட சிந்தை அல்லது எண்ண வாழ்வை கொண்டிருப்பது, உறுதியான அத்தியாவசியமாய் இருக்கிறது. ஒவ்வொரு சிந்தனையையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய நாம் சிறைப்படுத்த வேண்டும் (2 கொரி. 10:5). எண்ணங் களுக்கு மூன்று ஆதாரங்கள் உள்ளன: ஆத்துமாவிலிருந்துவரும் நமது எண்ணங்கள், பிசாசினிடத்திலிருந்து வரும் சோதனையின் எண்ணங்கள், நமக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து ஆவி மனிதனுக்கு வரும் எண்ணங்கள். மனித ஆவியின் எண்ணங்கள் மனித ஆவியின் உள்ளான சத்தங்களாகும்.

ஆவி மனிதனின் எண்ணங்களுக்கும், ஆத்துமாவிலும் பிசாசினிடத்திலும் இருந்து வரும் எண்ணங்களுக்குமுள்ள தெளிவான வித்தியாசத்தை நாம் குறிப்பிட முடியும். அவைகளை சுருக்கமாக பட்டியலிட்டுள்ளோம்.

| **ஆவியிடமிருந்துவரும் எண்ணங்கள்** | **ஆத்துமாவிடமிருந்துவரும் எண்ணங்கள்** |
|---|---|
| 1. எழுதப்பட்ட தேவ வார்த்தைக்கு ஒத்திருக்கிறது | 1. எழுதப்பட்ட தேவ வார்த்தைக்கு முரண்பட்டிருக்கும் |
| 2. அன்பையும் விசுவாசத்தையும் உருவாக்கும் | 2. சந்தேகத்தையும் பயத்தையும் உருவாக்கும் |
| 3. ஆராதனை மற்றும் ஜெபவேளைகளில் உறுதியாகும் | 3. தேவனோடு ஐக்கியம் குறைவுபட்டிருக்கும் நேரங்களில் உறுதியாகும். |
| 4. பொறுமையாயிருக்கும் ஆனால் ஸ்திரமாயிருக்கும் | 4. அவசரமாயிருக்கும் மற்றும் சுயவற்புறுத்துதல் செய்யும் |
| 5. இயேசுவை மகிமைப்படுத்த நாடும் | 5. சுய மகிமையை தேடும் |
| 6. சபைக்கு பக்திவிருத்தியுண்டாக்கும் | 6. சபையை பாழாக்கும் |
| 7. அன்பு செலுத்தும் மன்னிக்கும் | 7. பொறாமையுடனும் எரிச்சலுடனும் இருக்கும் |

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

8. உறுதியான உள்ளான சாட்சியை ஏவி எழுப்பும்
9. பரிசுத்த ஆவியானவரிடத்திலிருந்தும் ஆவி மண்டலத்திலிருந்தும் வரும்

8. ஆவி மனிதனுக்கு ஆழ்ந்த கவலையின் உணர்வை உண்டாக்கும்.
9. உணர்வு மண்டலத்திலிருந்து வரும்

நாம் அதிக நேரங்கள் ஜெபத்திலும் தேவனுக்கு காத்திருப்பதிலும் செலவழிக்கும் போது, மிகவும் தெளிவாக மனித ஆவியின் சத்தத்தை நாம் கேட்க முடியும். அது சாந்தமான இனிமையான மென்மையான சத்தமாகும். இந்த வாழ்வின் காரியங்களில் நாம் அலுவல டைந்துவிடும்போது, அவசரத்திலும் அலுவல்களிலும் ஒழுங்கில்லாமல் குவிந்து கிடக்கும் மனித செயல்களினாலும் மனித ஆவி சொல்வதை நாம் கேட்க முடியாமற் போகிறோம். பயிற்சியின் மூலமாய் மனித ஆவியின் சத்தத்தை நாம் நன்கு பகுத்தறிய முடியும். ஆனால், மனித வாழ்வின் அனுதின அலுவல்களிலிருந்து நேரமெடுத்து தேவனுக்காக காத்திருப்பது எப்பொழுதும் அத்தியாவசியமாகிறது.

மனித ஆவி சாயல்களினாலும் படங்களினாலும் நமது ஆத்துமாவிற்கு செய்திகளை கொண்டுவருகிறது. நமது வாழ்வில் வரும் சில சொப்பனங்கள், நாம் கடைப்பிடிக்க வேண்டியவைகளை மனித ஆவி நமக்கு சொல்ல நாடுவதாகும். எல்லா சொப்பனங்களும் மனித ஆவியின் நேரடி விளைவு அல்ல. ஆத்துமா நமது அனுதின வாழ்வின் புள்ளிவிவரங்களை மறுவகைப்படுத்துவதே அநேக சொப்பனங்களாகும். செயல்களின் திரட்சியினாலும் சொப்பனம் வரமுடியும் (பிர. 5:3).

நாம் விழித்திருக்கும் நேரங்களில், சாயல்களிலும் படங்களிலும் மனித ஆவி ஆத்துமாவிற்கு செய்தி சொல்லும்போது, நமது கற்பனையின் மனத்திரையில் நமக்கு படங்களும் எண்ணப் பதிப்புகளும் காண்பிக்கப்படுகின்றன. அவைகள் சில நேரங்களில் மிகவும் மென்மையாகவும் இனிமையாகவும் மனதிரையில் விழும்படி காண்பிக்கப்படுவதால், எளிதாக அவைகளை புறக்கணிக்க முடியும். அவைகள், பிசாசுகளினால் நமது கற்பனையில் வீசி எறியப்படும் அக்கினி அம்புகளின் கட்டுக்கடங்காத சோதனை கற்பனைகளுக்கு எதிரானவை. மனித ஆவியிலிருந்து வரும் எண்ணங்களிலிருக்கும் அதே ஒன்பது குணாதிசயங்களும், சாயல்களோடும் படங்களோடும் காணப்படும்.

*மனித ஆவியையும் சிந்தனையையும் பயிற்றுவித்தல்*

மனித ஆவி போஷிக்கப்பட்டு பயிற்சிபெற வேண்டியது அவசியமாகும். தேவ வார்த்தையே ஆவி மனிதனின் உணவாகும். அஸ்திபார சத்தியங்களின் தொடரில், முதலாம் தொகுப்பில் கையாளப்பட்டுள்ள, வேத வசனத்தை தியானிக்கும் கலையை நாம் கண்டிப்பாக கற்றுக்கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தை மட்டுமே, மனித ஆவியையும் மனித ஆத்துமாவையும் பிரிக்கக்கூடியது (எபி. 4:12). மனித சரீரத்தைப் போன்றே, மனித ஆவிக்கும் பயிற்சி அவசியம். மனித ஆவியின் ஆவிக்குரிய பயிற்சியின் முக்கிய வழியே, அந்நிய பாஷையில் ஜெபிப்பதுதான். நாம் அந்நிய பாஷையில் ஜெபிக்கும் போது, நமது மனித ஆவிகளே ஜெபிக்கின்றன (1 கொரி. 14:14) கொரிந்து சபை விசுவாசி களெல்லாரிலும் அவர் அதிகமாக ஜெபித்தார் என்று சொல்லுமளவிற்கு, பவுல் தனது ஆவி மனிதனில் நன்கு பயிற்சி பெற்றிருந்தார் (1 கொரி. 14:18).

ஆவி மனிதனிடமிருந்து எண்ணங்களையும் சாயல்களையும் பெற்றுக்கொள்ள உணர்வுள்ள ஆயுதமாயிருப்பதற்கு, மனித சிந்தையும் பயிற்சி பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. தனது விளங்கிக்கொள்ளுதலோடு தேவனை ஆராதிப்பதாக பவுல்

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

பின்னும் சொன்னார் (1 கொரி. 14:15). உண்மையுள்ள, ஒழுக்கமுள்ள, நீதியுள்ள, கற்புள்ள, அன்புள்ள, நற்கீர்த்தியுள்ள, புண்ணியமான, புகழானவைகளையே சிந்திப்பதைப் பற்றி அவர் பேசினார் (பிலி. 4:8). இவைகள் நடைபெறும்பொழுது, தேவ சமாதானம் இருதயங்களையும் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள் காத்துக்கொள்ளும் (பிலி. 4:7). சமாதானமுள்ள சிந்தனையின் சூழ்நிலையில்தான், மனித ஆவியின் உள்ளான சத்தத்தை நாம் கேட்க முடியும். கட்டுப்படுத்தப்படாத சிந்தனையில் மனித ஆவியின் சத்தத்தை கவனிப்பது, ஆண்டனாவை சரியான சீர் நிலையில் கொண்டுவராமல், ஒரு ரேடியோ நிகழ்ச்சியை கவனிப்பதுபோலாகும். அங்கு அதிகமான மின்சார சத்தங்களும் கரகரப்பான சத்தங்களும் இருக்கும்.

உங்களுடைய சிந்தையின் வழியாக கடந்து செல்லும் எண்ணங்களைப்பற்றி உணர்வு உள்ளவர்களாயிருங்கள். அவைகள் எல்லாமே ஏதாவது ஆவிக்குரிய முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்காது. ஆனால், அவைகளில் நீங்கள் பெற்றுக்கொள்ளும் சில எண்ணங்கள், மனித ஆவியினிடத்திலிருந்து வரும் அறிவுரைகளாக இருக்கலாம். உங்கள் மனித ஆவியை கவனித்துக் கேட்பது லாபகரமானதாயிருக்கும். நமது ஆத்துமாக்களைக் காட்டிலும் நமது ஆவிகளே, இந்த உலக வாழ்வின் அலுவல்களில் நடந்துகொள்வது பற்றி அதிகமாக அறிந்திருக்கும். நமது ஆவியிலிருந்து நமக்கு கிடைக்கும் புத்திக்கூர்மையோடு, மிகவும் சிறப்பான கல்வியும் பள்ளிகளும் கூட போட்டியிட முடியாது.

அவனுக்குள் உள்ள ஆவி மனிதன் மட்டுமே, அந்த மனிதனிலுள்ள எல்லாவற்றையும் அறிவான் (1 கொரி. 2:11). மனித ஆவியிலிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் புத்திமதிகளில் சில, இயற்கையான சிந்தைக்கு முட்டாள்தனமாக தோன்றலாம். ஜென்ம சுபாவ மனிதன் ஆவியானவருடைய காரியங்களை ஏற்றுக்கொள்ளமாட்டான், ஏனெனில் அவைகள் அவனுக்கு பைத்தியமாகத் தோன்றும் (1 கொரி. 2:14). இயற்கையின் விதிகளைப் பற்றி அவன் விளங்கியிருப்பதைப் பொறுத்தே, ஜென்ம சுபாவ மனிதன் எல்லாவற்றையும் செய்ய முடியும். எனினும் ஒரு விசுவாசிக்குள் இருக்கும் புது பிறப்பின் ஆவி, எல்லா இயற்கை விதிகளோடு ஆவிக்குரிய விதிகளையும் அறிந்திருப்பதால், ஜென்ம சுபாவ மனிதனைக் காட்டிலும் உயர்வான நிலையில் செயல்படுவான். அது இயற்கையின் விதியால் மட்டுப் படுத்தப்படுவதில்லை. பல நேரங்களில் இயற்கையின் விதிகள் மேற்கொள்ளப்பட்டு அற்புதங்கள் நிகழ்கின்றன.

உங்களுக்குள் இருக்கும் மனித ஆவியின் சத்தத்திற்கு கவனம் செலுத்துங்கள். அற்புத மண்டலங்களின் திறவுகோல் உங்களில் இருக்கிறது. உங்கள் வாழ்வுக்குத் தேவையான எல்லா ஐசுவரியங்களும் ஆதாரங்களும் உங்களுக்குள் இருக்கின்றன. பவுல் தனது மனித ஆவியோடு தேவனை சேவித்தார் (ரோம. 1:9) ஆவி மனிதனிலிருந்து வரும் ஒரு எண்ணம், ஒரு கற்பனை, உங்கள் முழுவாழ்வையும் மாற்ற முடியும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

## அத்தியாயம் 3

# பரிசுத்த ஆவியானவரின் சத்தம்

பரிசுத்த ஆவியானவரின் சத்தம் சில நேரங்களில் வெளிப்புறமான சத்தத்தைப்போல நமக்கு கேட்டாலும், அவரது சத்தம் உள்ளான சத்தமாகவே உள்ளது. பரிசுத்த ஆவியானவர் ஆவி மனிதனில் வாழ்கிறார் (யோவா. 14:17; எசே. 36:27). பரிசுத்த ஆவியானவரின் சத்தம், மனித ஆவியின் சத்தத்தைவிட கீழ்காணும் வகைகளில் வித்தியாசப்படுகின்றன:

1. மனித ஆவியின் சத்தத்தைக் காட்டிலும், பரிசுத்த ஆவியானவரின் சத்தம் மிகவும் அதிகாரமுள்ளதாயிருக்கும்.
2. பரிசுத்த ஆவியானவர் பேசும்பொழுது, தேவ பிரசன்னத்தின் வெளிப்படுத்துதல் உறுதியாய் இருக்கும்.
3. மனித ஆவியின் சத்தத்தைக் காட்டிலும், பரிசுத்த ஆவியானவரின் சத்தம் உள்ளாக பலமான சத்தமாயிருக்கும்.
4. பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தோடு நம்மால் வாதிட முடியாது. ஏனெனில், அவரது புத்திமதிகளில் அவர் ஸ்திரமாயிருக்கிறார். அநேக வேளையில், தேவனுடைய வழிகளை நாம் கடைப்பிடிக்கும்படி, மனித ஆவி நம்மோடு காரணங்களை சொல்லி நம்மை உந்தித் தள்ளும்.
5. பரிசுத்த ஆவியானவரின் சத்தம், ஊழிய வாழ்வின் பகுதிகளை கையாள்கிறது. ஆனால், மனித ஆவியின் சத்தம், நமது உலக வாழ்வின் பகுதிகளை கையாள் கிறது. சில வேளைகளில் அரிதாக, பரிசுத்த ஆவியானவர் நமது உலக வாழ்வின் ஒரு பகுதிக்கு புத்தி சொல்லலாம். ஆனால், இதுவும் தேவன் நம்மை அழைத்த ஊழியத்திற்கு சம்மந்தப்பட்டதாகவே இருக்கும். ஊழிய வாழ்வு என்று சொல்லும் போது, முழுநேரமோ அல்லது முழு நேரமில்லா ஊழியமோ ஆகியவற்றின் எல்லா பகுதிகளையும் உள்ளடக்குகிறோம்.
6. பரிசுத்த ஆவியானவர் வெளிப்பாட்டைப் பற்றி பேசுகிறார். ஆனால் மனித ஆவியோ அறியும் திறனைப் பற்றியது.
7. பரிசுத்த ஆவியானவர், பிதா மற்றும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சார்பில் தொடர்புகொள்கிறார். ஆனால் மனித ஆவியோ, பரிசுத்த ஆவியானவரின் சார்பில் நம்மோடு தொடர்புகொள்கிறது.

*அப்போஸ்தல நடபடிகளில் பரிசுத்த ஆவியானவர்*

பரிசுத்த ஆவியானவர் ஒரு வெறும் காணமுடியாத பிரசன்னம் மட்டுமல்ல. அவர் ஒரு உண்மையான நபர். பரிசுத்த ஆவியானவரை உலகம் பார்க்காமலும் அறியாமலும் இருப்பதால், இந்த உலகம் அவரை அறியவில்லை என்று இயேசு தனது சீஷர்களுக்கு சொன்னார் (யோவா. 14:17). எனினும், அவர் நமக்குள்ளே வாசம்பண்ணுவதால், நாம் அவரை அறிவோம் என்று அதே பகுதியில் இயேசு சொன்னார். பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தைக் கேட்கும் இரகசியமானது, நமது இருதயங்களில் நிலைத்திருக்கும் அவரது பிரசன்னத்தையும் நபரையும் நாம் கற்றுக்கொள்வதிலிருக்கிறது. பரிசுத்த ஆவியானவரில் நிறைந்திருப்பது என்பது, அவரது உள்வசிப்பின் பிரசன்னத்தில் விழிப்புணர்வோடு இருப்பது தான்.

அப்போஸ்தலர் நடபடிகளிலுள்ள சீஷர்கள், பரிசுத்த ஆவியானவரை வெளிப்புறமாக உணரவில்லை, மாறாக உட்புறமாக அவரை உணர்ந்திருந்தார்கள். பெந்தெகொஸ்தே நாளில், நூற்றி இருபது சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரில் நிறைந்து அந்நிய பாஷைகளில்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

பேசத்தொடங்கினார்கள் (அப். 2:4). உள்ளிருந்து வெளியாக பரிசுத்த ஆவியானவர் அவர்களை கட்டுப்படுத்தினார். அதிலிருந்து, சீஷர்களுடைய வாழ்வின் மூலமாக பரிசுத்த ஆவியானவரே செயல்பட்டார்.

பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்ட மனிதர்கள் மூலமாக, இயேசுகிறிஸ்துவின் கிரியைகள் தொடர்ந்தன. யூதர்களின் கேள்விக்கு பேதுரு பதில் சொன்னபோது, அவர் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டிருந்தார் (அப். 4:8). ஸ்தேவான் பரிசுத்த ஆவியான வராலும் விசுவாசத்தினாலும் நிறைந்தது, பலத்த அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார் (அப். 6:8). பவுல் பரிசுத்த ஆவியானவரால் நிறைந்து, மாயவித்தைக் காரணாகிய எலிமாவின் மேல் நியாயத்தீர்ப்பை அறிவித்தார் (அப். 13:9). ஒவ்வொரு நிகழ்வுகளிலும், சீஷர்களில் வாசம்பண்ணின பரிசுத்த ஆவியானவர்தான், பலத்த கிரியைகளை செய்தவர் ஆவார்.

பிலிப்பு வழியருகே காத்திருந்தபோது, பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தை தெளிவாக அடையாளங்கண்டு கொண்டார் (அப். 8:29). அந்த நேரத்தில் நாம் அவருக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாலும், நாம் ஒன்றையும் கேட்டிருக்கவே முடியாது. ஏனெனில், பிலிப்பு கேட்டது ஒரு உள்ளான சத்தமே. தான் கண்ட தரிசனத்தின் அர்த்தம் இன்னதென்று பேதுரு ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கையில், பரிசுத்த ஆவியானவர் அவருடைய சிந்தனையில் குறுக்கிட்டு, கீழே சென்று மூன்று மனிதர்களை சந்திக்கும்படி சொன்னார் (அப். 10:19, 20). பரிசுத்த ஆவியானவர்தான் போகும்படி தன்னைத் தூண்டினார் என்று, பேதுரு பிறகு விளக்கிச் சொன்னார் (அப். 11:12). பேதுரு பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தை அறிந்திருந்தார்.

அந்தியோகியாவிலிருந்த ஐந்து தீர்க்கதரிசிகளும் போதகர்களும், பரிசுத்த ஆவியான வரின் சத்தத்தை ஒரே சமயத்தில் கேட்டார்கள் (அப். 13:1, 2) ஆசியா மற்றும் பித்தினியா வுக்குள் போக பரிசுத்த ஆவியானவர் தடைசெய்தார் (அப். 16:6). அவர் பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தை தெளிவாக அறிந்திருந்தார். பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தை அகபு அறிந்து, “பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறதென்னவென்றால்” என்று தீர்க்கதரிசனம் உரைத்தார்.

அப்போஸ்தலர் நடபடிகளில் முக்கியத்துவப்படுத்தப்பட்ட எல்லா மனிதர்களும், தனிப்பட்ட முறையில் பரிசுத்த ஆவியானவரை அறிந்து, அவரது சத்தத்தை அடையாளம் கண்டு கொண்டனர். அவரது சத்தத்தை தங்களது சொந்த உள்ளான எண்ணப்பதிவு என்று தவறு செய்யவில்லை. ஆனால், பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தை நிச்சயமாக அறிந்திருந்தனர். நாம் அனைவருமே நாம் நேசிப்பவர்களின் சத்தத்தை, நமது கண்களை மூடிக் கொண்டே அடையாளம் கண்டுகொள்ள முடியும். எனினும், எல்லா கிறிஸ்தவர்களும் பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தை அடையாளம் கண்டுக்கொள்ள முடிவதில்லை. பரிசுத்த ஆவி யானவரோடு நாம் எவ்வளவு நெருங்கி இருக்கிறோம் மற்றும் எந்த அளவுக்கு அவர் நமக்கு ஒரு நபராய் இருக்கிறார் என்பதை அது பிரதிபளிக்கிறது.

### *பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியம்*

‘ஐக்கியம்’ என்ற வார்த்தை மூன்று அர்த்தங்களைக் கொண்ட கிரேக்க வார்த்தையாகிய *‘koinonia’* ‘கொய்னோனியா’ என்ற வார்த்தையிலிருந்து வருகிறது. அதன் அர்த்தம் ஒற்றுமை, பங்காளத்துவம் மற்றும் பகிர்ந்துகொள்ளுதல் ஆகும். பரிசுத்த ஆவியானவரின் *‘koinonia’* ‘கொய்னோனியா’வை நாம் எல்லாரும் கற்றுக்கொள்ள வேண்டும் (2 கொரி. 13:14). *‘koinonia’* ‘கொய்னோனியா’ என்ற வார்த்தை, கர்த்தருடைய இராப்போஜனத்தின் ஒற்றுமையை அல்லது ஒன்று சேர்வதைக் குறிக்க பயன்படுத்தப்பட்டள்ளது. அது, இயேசு கிறிஸ்துவின் சரீரம் மற்றும் இரத்தத்தின் அந்நியோந்நிய ஐக்கியம் (‘கொய்னோனியா’) என்று அழைக்கப்படுகிறது (1 கொரி. 10:16). அதே மூல வார்த்தை *‘koinoneo’*

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

'கொய்னோனியோ' என்பது யாக்கோபும் யோவானும் மீன்பிடிப்பதில் பங்காளிகளாக ('கொய்னோனியோ') சீமோனோடு (லூக். 5:10) இருந்ததை குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பரிசுத்தவான்களின் தேவைகளுக்காக (ரோம. 15:26) நன்கொடை ('கொய்னோனியா') கொடுப்பதையும் பகிர்ந்துகொள்வதையும் பற்றி பவுல் பேசுகிறார் (ரோம. 15:26).

நாம் பரிசுத்த ஆவியானவரோடு ஒன்றாயிருக்கவும், பங்காளத்துவம் கொள்ளவும், பகிர்ந்துகொள்ளவும் வேண்டிய இரகசியத்தை கற்றுக்கொள்ளவும் வேண்டும். ஒன்றாயிருப்ப தென்பது, நமது இருதயத்தில் நிலைத்திருக்கும் அவரது பிரசன்னத்தின் உணர்வைக் குறித்துப் பேசுகிறது. பரிசுத்த ஆவியானவரோடு பங்காளத்துவம் என்பது, நமது வாழ்விலும் ஊழியத்திலும், தொழிலிலும், அவர் நமது மூத்த பங்காளராயிருப்பதைக் குறித்துப் பேசுகிறது. தீர்மானம் எடுக்கும் குழுவின் தலைவராக அவர் அமர்ந்திருக்கிறார். அவரே ஆலோசனை கொடுத்து, முடிவான தீர்மானத்தையும் எடுக்கிறார். பகிர்ந்துகொள்ளுதல் என்பது, பரிசுத்த ஆவியானவரோடுள்ள நெருக்கத்தை பேசுகிறது. நமது எல்லா தேவைகளுக்கும் அவரையே முற்றிலுமாக சார்ந்திருத்தல்.

நாம் பரிசுத்த ஆவியானவரை காணமுடியாமலிருந்தாலும், அவர் சரீரப்பிரகாரமாக நம்மோடு இருப்பது போலவே, நமது வாழ்வை வாழ வேண்டும். அவர் சரீரப்பிரகாரமாக இல்லாத இடத்தை எடுத்துக்கொள்ளவே, பரிசுத்த ஆவியானவரை இயேசுவே அனுப்பினார் (யோவா. 14:15–18). அவர் நமக்கு உதவி செய்பவர் (*பாராகிளீடோஸ்* – நமக்கு பக்கத்திலிருக்கும்படி அழைக்கப்பட்டவர்) அவர் நமக்கு எல்லாவற்றையும் போதிக்கிறார். அவர் நமக்கு வேதவார்த்தையை ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறார் (யோவா. 14:26). அவர் சத்தத்தையே நாம் கேட்கமுடியாவிட்டால், அவரது போதனைகளை நாம் எப்படி கேட்க முடியும்?

*அறியும் ஆற்றலிலிருந்து வெளிப்பாட்டை வித்தியாசப்படுத்துதல்*

இவ்வுலகத்தில் பரிசுத்த ஆவியானவரது வேலைகள் ஏழுவகையானவைகள். அவைகள் பின்வருமாறு:

1. இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு புதுப் பிறப்பைக்கொடுத்தல்.
2. பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானத்தின் மூலமாக ஒரு விசுவாசியை அதிகாரப் படுத்துதல்.
3. தேவனோடு பேசி தொடர்பு கொள்ள விசுவாசிகளை பெலப்படுத்துதல் (அப். 2:4; ரோம. 8:26, 27).
4. பரிசுத்த ஆவியானவரின் ஒன்பது வரங்களில் செயல்பட, விசுவாசிகளை தயார் படுத்துதல் (1 கொரி. 12:7–11).
5. விசுவாசிகளை ஒன்பது ஊழிங்களில் நிற்கவும், ஐந்துவகை செயல்பாடுகளில் நிற்கவும் அபிஷேகித்தல் (அப். 13:2; 20:28).
6. விசுவாசிகளின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் கனிகளை பூரணப்படுத்துதல் (கலா. 5:16–18, 22–25).
7. தேவவார்த்தையையும், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவையும், பிதாவாகிய தேவனையும் வெளிப்படுத்துதல் (யோவா. 16:13–15).

சபை யுகத்தின் கடைசிகாலத்தில், பரிசுத்த ஆவியானவரின் எட்டாவதும் கடைசியானது மான வேலை என்னவெனில், சபையின் மகாபெரிய எடுத்துக்கொள்ளப்படுதலில், நம் எல்லாரையும் வீட்டிற்கு கொண்டு செல்லுதலாகும் (ரோம. 8:11). அஸ்திபார சத்தியங்களின் தொடர்களில் வித்தியாசமான தொகுப்புகளில், மேற்சொன்ன எல்லா குறிப்புகளும் உள்ளன. பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தை பகுத்தறிவதில் வெளிப்பாடு இருப்பதால், நாம் அதையே கவனிக்கப்போகிறோம்.

வாழ்வில் நாம் பெற்றுக்கொள்ளும் எல்லா வெளிப்பாடுகளுக்கும் பின்னால் உள்ள உபகரணம் பரிசுத்த ஆவியானவரே. மனித ஆவியின் அறியும் ஆற்றலுக்கும் பரிசுத்த

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

ஆவியானவரின் வெளிப்பாட்டிற்கும் உள்ள வித்தியாசம், சரீர தொடு உணர்விற்கும் சரீர பார்வை உணர்வுக்கும் உள்ள வித்தியாசத்தைப் போன்றதாகும். கைகளினால் தொட்டு ஒரு பொருளை அடையாளம் கண்டுபிடிக்க நீண்ட நேரமாகும். ஆனால், கண்களினால் பார்த்து ஒரு பொருளை அடையாளம் காண, ஒருசில நொடிகளே ஆகும். நமது அறியும் ஆற்றலில் வளர முடியும் (எபி. 5:14). நமது அறியும் ஆற்றலின் விகிதாச்சாரத்தில் நமது ஆவிக்குரிய நியாயத்தீர்மானமும் முன்னேற்றமடைகிறது. நமது அறியும் ஆற்றலில் நாம் மென்மேலும் வளர வேண்டும் (பிலி. 1:9).

பரிசுத்த ஆவியானவரால் வரும் ஆவிக்குரிய வெளிப்பாடு, நித்தியமானதும் மாறாதது மாகும். அவர் தனக்குத்தானே முரண்படுவதுமில்லை, அவர் சொல்லுகிறதை மாற்றுவது மில்லை. அவரது வெளிப்பாடுகள் முடிவானவைகள். அவைகள் எழுதப்பட்ட தேவ வார்த்தைக்கு எப்பொழுதுமே ஒத்திருக்கின்றன. ஏனெனில், தேவ வார்த்தை முதலாவது இடத்தில், அவரிடம் இருந்து வந்த வெளிப்பாடாகும் (1 பேது. 1:11, 12; 2 தீமோ. 3:16). சுவிசேஷத்தை எந்த மனிதனிடமிருந்து பெற்றுக்கொள்ளவுமில்லை கற்றுக்கொள்ளவுமில்லை, இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாட்டின் மூலமே தனக்கு வந்ததாக பவுல் சொன்னார் (கலா. 1:12). அவரிடமிருந்தே எல்லாவற்றையும் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்துவதாக, இயேசு யோவான் சுவிசேஷத்தில் சொன்னார். எனவே இந்த வெளிப்பாட்டை பரிசுத்த ஆவியான வர்தான் பவுலுக்கு கொடுத்தார் என்பதில் நமக்கு நிச்சயமுண்டு (யோவா. 16:13–15).

தனது ஊழிய வருடங்களிலெல்லாம், பரிசுத்த ஆவியானவர் தனக்கு கொடுத்த, வெளிப் பாட்டின் தலைப்பையோ ஒரு எழுத்தையோ பவுல் மாற்றவில்லை. மற்றொருவரோ அல்லது ஒரு தூதனோ, அவர் பிரசங்கித்த சுவிசேஷத்திற்கு மாறானதொன்றை பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் (கலா. 1:7, 8). பரிசுத்த ஆவியானவர் தன்னோடு பேசினதாக உரிமைகோரும் அநேக மக்கள், வெளிப்பாடு என்று சொன்னதை திரும்ப திரும்ப மாற்றிக்கொண்டே இருப்பதால், அவர்கள் தங்கள் மனித ஆவியில், அதை மங்களாகவே பெற்றிருக்கின்றனர் (1 கொரி. 13:12).

நாம் நமது மேலே உள்ள அபிஷேகத்தில் செயல்பட, பரிசுத்த ஆவியானவரின் சத்தத்திற்கும் மனித ஆவியின் சத்தத்திற்கும் உள்ள வித்தியாசத்தை, நாம் கற்றுக்கொள்ள வேண்டும். பரிசுத்த ஆவியானவர் பேசும் ஒவ்வொரு முறையும், மேலே உள்ள அபிஷேகத்தை அவர் பகிர்ந்தளிக்கிறார். அவரது அதிகாரமான வார்த்தை உறுதியாகவும், ஆனால் மென்மையாகவும் இருக்கிறது. அதிகமான நேரங்களில் மனித ஆவியே நம்மை நடத்திச் செல்கிறது. நமது வாழ்விலும் ஊழியத்திலும் பரிசுத்த ஆவியானவர் தகவல்களையும், செல்ல வேண்டிய பாதையையும் காட்டுகிறார். பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தைக் கேட்கும் மனிதன் பாக்கியவான். பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தை கேட்டு, அதற்கு செவி கொடுத்த மனிதர்களே, சபை சரித்திரத்தின் ஒவ்வொரு அசைவாடுதலையும் தலைமையேற்று நடத்தி உள்ளனர். ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன் (வெளி. 2:7, 11, 17, 29; 3:6, 13, 22). கேட்டு கீழ்ப்படிபவரது பலன்கள் மகா பெரியவையே.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

## அத்தியாயம் 4

# கண்கவர் வழிநடத்துதல்கள்

பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல்கள் எல்லாமே, இயற்கைக்கு அப்பாற்பட்டவை களாக இருந்தாலும், அவைகள் எல்லாமே கண்கவர் நிலையில் இருப்பதில்லை. கிறிஸ்தவ வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் கண்கவர் வழிநடத்துதல்களுக்கு ஒரு இடம் இருக்கத்தான் செய்கிறது. எனினும் எல்லா கண்கவர் வழிநடத்துதல்களையும் பகுத்தறிய, வழிகாட்டும் நெறிமுறைகள் அவசியமாகின்றன.

*தரிசனங்களும் சொப்பனங்களும்*

தரிசனங்களையும் சொப்பனங்களையும் நாம் நாடக்கூடாது. மாறாக, நமது வாழ்வில் அவரது பூரண சித்தத்தை பகுத்தறிந்த அளவுக்கு ஏற்றவாறு, நாம் தேவனுக்குக் கீழ்ப்படிய நாட வேண்டும். அவர் விரும்பிய சரியான நேரத்திலேயும், அவரது விவேகத்தின்படியேயும், நமது வாழ்வில் தரிசனங்கள் வெளிப்பாடுகளில் செயல்பட, தேவன் தெரிந்து கொள்ளலாம். தேவனால் வல்லமையாகப் பயன்படுத்தப்பட, தரிசனம் பார்க்க வேண்டிய அவசியமில்லை. தேவனாலே வல்லமையாகப் பயன்படுத்தப்பட்ட கேத்தரின் குல்மேல், எந்த ஒரு தரிசனத்தையும் பார்த்ததாக எழுதப்படவில்லை.

அதே நேரத்தில், வில்லியம் பிரன்ஹாம் போன்ற மற்ற தேவ மனிதர்களின் ஊழியங்கள், கண்கவரும் ஊழியங்களாயின. கிறிஸ்தவத்தின் முக்கிய சபைகளின் கூட்டத்தை விட்டு விலகி, தனது உபதேச பிழைக்குள் செல்லுமுன்பு, ஒரு தூதனோடு சேர்ந்து தரிசனங்களில் முறைப்படி செயல்பட்டார். கண்கவர் மண்டலத்தில் செயல்படும் மக்களைப்பற்றி நாம் சந்தேகப்படவோ அல்லது கண்கவர் ஊழியத்தை நாடுகிறவர்களாக மட்டுமோ இருக்கக் கூடாது. நாம் சமச்சீர் நிலையிலிருந்து, அதே வேளையில் தேவ வெளிப்படுத்துதல்களுக்கு திறந்த உள்ளத்தோடு இருக்க வேண்டும்.

செயல்படும் கிருபை பகிர்ந்தளிப்பினால், தேவன் ஒரு பாத்திரத்தின் மூலம் தரிசனங்களிலும் சொப்பனங்களிலும் செயல்பட, சில நேரங்களில் தெரிந்துகொள்ளலாம். பரிசுத்த ஆவியானவருடைய இந்த ஆதீன காலத்தின் வெளிப்படுத்துதலில், தரிசனங்கள் பெருகியிருக்கும் (அப். 2:17). மூன்று வகையான தரிசனங்கள், இந்த அஸ்திபார சத்திய தொடர் தொகுப்பு எட்டில் கையாளப்பட்டதுபோல, உள்ளன. எனவே மீண்டும் அதையே விவரிக்காமல், அதற்குப் பதிலாக, தரிசனங்களில் பழக்கப்பட்டவர்களின் பொதுவான பகுதிகளை குறிப்பிட்டு காட்டுவோம்.

ஒரு பாத்திரத்திற்கென்று, தரிசனங்களின் அவருடைய வெளிப்படுத்துதல்களுக்கு தேவ காலம் ஒன்று இருக்கிறது. தீர்க்கதரிசியாகிய தானியேலின் எழுதப்பட்ட எல்லா தரிசனங்களும், தனது வயதான காலத்தில் கண்டவைகளாகும். அவைகளெல்லாம், பெல்ஷாசார், தரியு, கோரேஸ் ஆகியோரின் ஆளுகையின் போது நடைபெற்றன (தானி. 7:1; 8:19; 10:1). இந்தக் காலத்தில் தானியேல் தனது எண்பதுகளில் இருந்திருக்க வேண்டும். ஆண்டவருடைய சத்தத்தையோ தரிசனத்தையோ சாமுவேல் சிறிய பையனாக அறியவில்லை. தேவ ஆலயத்தில் அவனுடைய உண்மையான சேவையின் சிலகாலங்கள் கழித்து, தேவனுடைய கண்கவர் முதல் சந்திப்பை அனுபவித்தார் (1 சாமு. 3:1–4).

அப்படியென்றால், ஒரு விசுவாசி மறுபடியும் பிறந்தபிறகு, கண்கவர் தரிசனத்தின் அனுபவத்தை பெற்றுக்கொள்ள முடியாது என்பதில்லை. ஒரு கண்கவர் வழியில் அவர்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

தன்னை வெளிப்படுத்துமுன்பு, தேவன் அந்த பாத்திரத்தை ஆயத்தப்படுத்துகிறார் என்பதே அதன் பொருளாகும். போதுமான ஆயத்தமில்லாமல், தரிசனங்களை அனுபவிக்கிறவர்கள், வழிவிலகிச் செல்லமுடியும். அளவுக்கதிகமான புத்திசாலிகளாக இருப்பவர்கள், தேவ ஆராதனையில் தங்கள் உணர்ச்சிகளை இலகுவாக விடுவித்துக்கொள்ளுகிறவர்களை போல, அதிகமான தரிசனங்களைக் காண்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆவி மண்டலத்தில் தரிசனங்களைப் பெற்றுக்கொள்ள தடையாய் இருப்பது, நம்பாத சந்தேகப்படும் புத்தியின் சிந்தையே ஆகும். தரிசனங்களின் மண்டலத்தில் கடந்து செல்வது, எளிய இருதயமுள்ள குழந்தையைப்போன்ற விசுவாசத் திறகே பொருந்தும்.

தரிசனங்களைப் பெற்றுக்கொண்ட வேதத்திலுள்ள அநேகர், ஜெப அல்லது ஆராதனை மனநிலையிலிருந்துள்ளனர். தரிசனம் வெளிப்படுத்தப்பட இது அத்தியாவசியமானதல்ல. ஆனால், இது வேதத்தில் அடிக்கடி காணப்பட்ட நடைமுறையாகவே உள்ளது. தானியேல் ஜெபத்திலிருந்தபோதுதான் பிரதான தூதனாகிய காபிரியேல் மூலமாக, எழுபது வாரங்களைப் பற்றிய தரிசனத்தை பெற்றுக்கொண்டார் (தானி. 9:20, 21). அவர் இன்னுமொரு தரிசனத்தை, இருபத்தொரு நாள் உபவாசத்தின் முடிவில் காபிரியேல் மூலமாக பெற்றுக் கொண்டார் (தானி. 10: 3–11). தூபங்காட்டி தேவனுக்கு ஆராதனை செய்கையில், ஒரு குழந்தைக்காக சகரியா ஜெபித்த ஜெபத்தின் பதிலாக, காபிரியேலின் தரிசனத்தைக் கண்டான் (லூக். 1:11, 13). பவுல் ஜெபத்திலிருந்தபோதுதான், அனனியாவின் தரிசனத்தைக் கண்டான் (அப். 9:11, 12). ஜெபத்தில் சில நேரங்களைக் கழித்த பிறகுதான், பேதுரு தரிசனம் கண்டார் (அப். 10:9–11).

சொப்பனங்கள் இரவின் தரிசனங்கள் என்றழைக்கப்படுகின்றன (யோபு 33:15). தேவ ஜனங்களை வழிநடத்த அவைகள் பயன்படுத்தப்பட்டன. சொப்பனத்தினால் யோசேப்புக்கு அவரது எதிர்காலம் அறிவிக்கப்பட்டது (ஆதி. 37:5–10). அவரது சொப்பனங்கள் நிறைவேற பதினைந்து ஆண்டுகள் ஆனது (ஆதி. 37:2; 41:46; 45:6). இயேசுவின் பெற்றோராகிய யோசேப்பும் மரியாளும், மூன்று சொப்பனங்களால் வழிநடத்தப்பட்டனர். தேவதூதன் ஒருவன் அந்த சொப்பனங்களில் யோசேப்போடே பேசினான் (மத். 2:13, 19, 22).

சங்கேதகுறியான சொப்பனங்களுக்கு வியாக்கியானம் அவசியமாகும். தரிசனங்கள் மற்றும் சொப்பனங்களின் வியாக்கியானம் என்னும் வரமுள்ளது (தானி. 1:16). தானியேல் அதை வெளிப்படுத்தினார். இந்த வரம்தான் அவருக்கு நேபுகாத்நேச்சாரின் அங்கீகாரத்தையும் பெற்றுத் தந்தது. யோசேப்பும் இந்த வியாக்கியான வரத்தை வெளிப்படுத்தினார் (ஆதி. 40:8). சங்கேதகுறியான சொப்பனம் வரும்போது, நாம் இந்த வியாக்கியான வரத்திற்காக ஜெபிக்க வேண்டும். எளிதாக விளங்கிக்கொள்ளக் கூடிய சொப்பனங்கள் நேரடியானவைகள். அவைகளுக்கு வியாக்கியானம் தேவையில்லை. பாஷைகளை வியாக்கியானம் செய்யும் வரம் என்ற ஆவியானவரின் ஒன்பது வரங்களுள் ஒன்றின் அம்சம்தான் இந்த வரம். தனது வாழ்விலிருந்த இந்த வரத்தின் மூலமாகத்தான், சுவற்றில் கையினால் எழுதப்பட்ட அறியாத பாஷையின் எழுத்துக்களை வியாக்கியானம் செய்தார் என்பதை கவனிக்கவும் (தானி. 5:13–16, 26–28).

### *காதினால் கேட்கக்கூடிய தேவ சத்தம்*

எப்பொழுதாவது, காதினால் கேட்கக்கூடிய சத்தத்தினால் தேவன் தனது ஜனத்தை வழி நடத்துகிறார். இயேசுவின் ஊழிய தொடக்கத்தில் காதினால் கேட்கக்கூடிய சத்தம் அவரது ஊழியத்தில் வெளிப்படுத்தப்பட்டது. தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்ற பிறகு, வானத்தில் இருந்து "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்ற ஒரு சத்தம் உண்டாயிற்று (மத். 3:17). அது அவர் வேலையில் அமர்த்தப்பட்டதற்கு தேவனிடம் இருந்து வந்த உறுதிப்பாடு ஆகும். வெளிப்படையாகச் சொல்லப்போனால், இயேசுவையும் யோவானையும் தவிர, வேறுயாரும் இதைக் கேட்கவில்லை. அந்த வெளிப்படுத்துதலுக்கு ஜனங்களிடமிருந்து எந்த பிரயுத்திரமும் காணப்படவில்லை. தேவனிடமிருந்து வரும்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

கேட்கக் கூடிய சத்தத்தை, தேவன் யாருக்கு வெளிப்படுத்த தெரிந்து கொள்கிறாரோ, அவர்கள் மட்டும்தான் அதைக் கேட்க முடியும். அது தரிசனத்தின் வெளிப்படுத்துதலைப் போன்றதுதான். ஒரு தரிசனம் பெற்றுக்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு ஒவ்வொருவருக்கும் இருக்காது.

கேட்கக்கூடிய சத்தம் இரண்டாவது முறையாக மறுரூப மலையில் வெளிப்படுத்தப்பட்டது (மத். 17:5). காதினால் கேக்கக்கூடிய சத்தத்தை கேட்கும் அனுபவம், பேதுருவுக்கு தனது வாழ்வு முழுவதிலும் தங்கியிருந்தது. அவர் கடந்து செல்லுமுன்பு, தனது நிருபத்தில் அதைப்பற்றி எழுதியுள்ளார் (2 பேது. 1:14, 17, 18). காதினால் கேட்கக்கூடிய தேவ சத்தத்தை பேதுரு அநேகமாக முதல் முறையும் கடைசி முறையும் கேட்டது இதுதான்.

கேட்கக்கூடிய தேவ சத்தம் மூன்றாவது முறையாக வெளிப்படுத்தப்பட்டது, இயேசு சிலுவையிலறையப்பட்டதற்கு முன்பு, இயேசுவின் உலக ஊழியத்தின் முடிவில்தான் நடைபெற்றது (யோவா. 12:27–30). இந்நிகழ்ச்சியில், அநேகர் அந்த சத்தத்தைக் கேட்டார்கள். ஆனால், பிரதியுத்திரங்கள் வித்தியாசமாயிருந்தன. அவர்களில் சிலர், இடி இடித்ததைப்போல கேட்டார்கள். மற்றவர்கள், ஒரு தேவதூதனின் சத்தமாக கேட்டார்கள். அநேகமாக சில வார்த்தைகளை கேட்டாலும், அவைகளை விளங்கிக்கொள்ள முடிய வில்லை. கேட்டவர்களின் ஆவிக்குரிய நிலை, காதால் கேட்ட தேவ சத்தத்தை பகுத்தறியும் அவர்களது திறமையை பாதித்தது.

இந்த மூன்று நிகழ்வுகளிலும், இயேசு சத்தத்தை எதிர்பார்க்கவில்லை மற்றும் அது அவருக்கு தேவையாயுமில்லை. அந்த சத்தம் அவருக்காக அல்ல, அதை கேட்டவர் களுக்காகவே வந்ததென, அந்த தேவ சத்தத்தை கேட்டவர்களுக்கு இயேசு சொன்னர் (யோவா. 12:30). இது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தை உறுதி செய்யவே வந்த, ஒரு விசேஷித்த தேவ வெளிப்படுத்துதல் ஆகும். அவ்வண்ணமே, தேவ சத்தத்தின் வெளிப்படுத்துதலுக்கு, ஒரு விசேஷித்த நோக்கம் உண்டு. ஒரு காரணமும் நோக்கமும் இன்றி, தேவன் கண்கவர் அடையாளங்களை நடப்பிப்பதில்லை.

தேவ வசனத்தின் மேலிருப்பதைக் காட்டிலும், நமது விசுவாசம் கண்கவருபவைகளில் சார்ந்திருந்தால், தேவன் கண்கவரும் வகையில் வெளிப்படுத்தவது அநேகமாக இருப்ப தில்லை. காலப்போக்கில் இது நமக்கு பக்தி விருத்தியை உண்டாக்காது. தேவன் தனது ஞானத்தினால், நாம் இதற்கு ஆயத்தமாகும்பொழுதுதான், அவர் இவ்வகையான வெளிப் படுத்துதலுக்கு அனுமதிக்கிறார். பொதுவாக, தரிசனத்திற்கோ அல்லது வேறு மற்ற கண்கவர் வெளிப்படுத்துதல்களுக்கோ அதி ஆவலோடு நாம் காணப்படும்போது, நாம் இன்னும் அதற்கு ஆயத்தமாகவில்லை. ஆனால், கண்கவருபவைகள் நமக்கு தேவை யில்லை என்ற நிலையில், தேவவார்த்தையின் மேல் மாத்திரம் நமது விசுவாசம் வளர்ந்து விடும்பொழுது, தேவன் கண்கவருபவைகளினால் வெளிப்படுத்த தெரிந்துகொள்ளலாம்.

எனது வாழ்வில் ஒரே ஒரு முறைதான் தேவசத்தத்தை காதால் கேட்டிருக்கிறேன். ஒரு நாள் அதிகாலையில் ஆண்டவர் என்னை எழுப்பினபொழுது, நான் நாற்பது நாள் உபவாசத் தின் மத்தியிலிருந்தேன். எனது படுக்கையிலிருந்து நான் எழும்புகிற நேரத்தில், அந்த அறையின் குறுக்கேயிருந்து வந்த ஒரு இனிய தெளிவான சத்தத்தை நான் கேட்டேன். அது தண்ணீரின் நதிகளைப்போல கேட்டது. ஆனால், அது இசையின் தன்மையோடு வந்தது. அது மூன்று வார்த்தைகளை மட்டும் சொன்னது – நான் உன்னை நேசிக்கிறேன். உடனடியாக, அவரது அரவணைப்பிலும் துடிக்கும் அன்பிலும் சூழ்ந்து கொள்ளப்பட்டேன். அவருக்கு முன்பாக ஒரு குழந்தையைப்போல அழுதேன். அவரது அன்பின் அலைகளினால் நான் கழுவப்பட்டபொழுது, உள்ளான ஒரு சுத்திகரிப்பையும் சுகமாக்கப்படுதலையும் உணர்ந் தேன். அந்த அனுபவத்திலிருந்து என்னில் ஏற்பட்ட மாற்றங்கள், என்னோடு தங்கி இருக் கின்றன. அவர் உங்களை எவ்வளவாய் நேசிக்கிறார் என்று தனிப்பட்ட முறையில் இயேசு சொல்வதை கேட்பதுதான், பரலோகத்தில் நாம் பெற்றுக்கொள்ளும் மிகப்பெரிய பலனாயிருக்கும் என்று நான் கருதுகிறேன்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

*தேவதூத வழிகாட்டல்*

சில நேரங்களில் தேவ தூதர்களிடமிருந்து நாம் செய்ய வேண்டியவைகளை பெற்றுக் கொண்டு, அவர்களோடு ஒத்துழைப்பது தேவ சித்தத்திலுள்ளது. எருசலேமிலிருந்து காசாவுக்கு செல்லும் வழியில் செல்லும்படி, ஒரு தூதன் சுவிசேஷகனாகிய பிலிப்புவிடம் சொன்னார் (அப். 8:26). அங்கு சென்றபோது எத்தியோப்பிய மந்திரியோடு சேர்ந்துகொள்ளும் படி பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தை கேட்டார். வெளிப்படுத்துதல்களின் ஒன்று சேருதல் களினால், பிலிப்பு வழிநடத்தப்பட்டார். தேவ தூதர்களின் அறிவுரைகளோடு நமது வாழ்வில், வழிநடத்துதல்களை தேவன் ஒன்று சேர்த்துள்ளார்.

நமது வாழ்வில் தேவதூத வழிகாட்டல், தரிசனங்கள் மூலமாகவோ அல்லது சிந்தனை மண்டலத்தின் மூலமாகவோ நடைபெற முடியும். அவர்கள் தங்களை வெளிப்படுத்தும் வேளையில், நாம் அவர்களை காணமுடிவதோடு, அவர்கள் தேவனிடமிருந்து சுமந்து வரும் செய்திகளையும் பெற்றுக்கொள்ள முடியும். சில நேரங்களில், நாம் அவர்களை காண முடியாத நிலையில் அவர்கள் இருக்கின்றனர். ஆனாலும், தேவ செய்தியை நமக்கு கொடுக்கின்றனர். நமது ஆவி சிந்தையின் தாழ்வாரத்தில், ஆவிக்குரிய சத்தங்களாக நாம் அந்த செய்திகளை 'கேட்கிறோம்'. நமது எண்ண வாழ்க்கைகளில் செல்வாக்கு செலுத்து வதின் மூலமாக, அவர்கள் செல்வாக்கு செலுத்துகின்றனர். அவைகள் தீமைக்கு நேராக செல்வாக்கு செலுத்துவதை தவிர, அசுத்த ஆவிகளும் அவ்வண்ணமே செய்கின்றன. ஆனால் தேவதூதர்கள் தேவனின் பரிபூரண சித்தத்தை நோக்கி செல்வாக்கு செலுத்து கின்றனர். அவர்கள் தங்கள் செய்திகளை சொப்பனத்தின் மூலமும் கொடுக்க முடியும்.

தேவதூதர்களின் ஊழியத்திற்கான அத்தியாவசியமான ஆயத்தம் ஜெபமும், ஆராதனை யும், தேவ வார்த்தையுமே. தானியேலின் ஜெப வாழ்கைதான், அவரது வாழ்வில் தேவதூதர் களின் வெளிப்படுத்துதல்களை கொண்டு வந்தன (தானி. 9:23; 10:1). அப்போஸ்தலர் நடபடிகளிலுள்ள சபையின் ஜெபங்கள்தான், ஒரு தேவதூதன் மூலமாக பேதுருவின் விடுதலையை கொண்டுவந்தன (அப். 12:5–7). 'அதனதன் இடத்தில் தானாக வந்து சேர்ந்ததைப்' போல காணப்படும் வாழ்வின் அநேக சூழ்நிலைகள், கண்ணால் காண முடியாத தேவதூதர்களின் வேலைகளாயிருக்கின்றன.

*கண்கவர் வெளிப்படுத்துதல்களுக்கான வழிகாட்டும் நெறிமுறைகள்*

எல்லா கண்கவர் வெளிப்படுத்துதல்களும், எழுதப்பட்ட தேவ வார்த்தையின் நுட்பமான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். தவறான வெளிப்படுத்துதல்களினால் வஞ்சிக் கப்படாமலிருக்கும்படி, நாம் கீழ்க்கண்ட வழிகாட்டும் நெறிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்:

1. கண்கவர் வழிநடத்துதல்கள், எழுதப்பட்ட தேவ வார்த்தையோடு ஒத்திருக்க வேண்டும். கொள்கையிலோ அல்லது நடைமுறையிலோ, எழுதப்பட்ட தேவ வார்த்தைக்கு முரண்படும் எந்த வழிநடத்துதலும் தவிர்க்கப்பட வேண்டும்.
2. கண்கவர் வழிநடத்துதல்கள், உள்ளான சாட்சியினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். கண்கவர் வழிநடத்துதல் உங்களது உள்ளான சாட்சியை குழப்புமென்றால், இன்னும் அதிகமாக நீங்கள் அதைப் பரிசோதிக்க வேண்டும்.
3. கண்கவர் வழிநடத்துதல், இறுதியான அதிகாரமல்ல. எழுதப்பட்ட தேவ வார்த்தையே இறுதியான அதிகாரமாகும். அவ்வண்ணமே, கண்கவர் வழிநடத்துதலை பெற்றுக் கொள்பவர்கள், முதிர்ச்சியடைந்த தேவ பரிசுத்தவான்களின் ஆலோசனைக்கு திறந்த மனதோடிருக்க வேண்டும்.
4. கண்கவர் வழிநடத்துதலின் ஆவி, கிறிஸ்துவைப் போன்றிருக்கும் ஆவியைப் போல் இருக்க வேண்டும் – தாழ்மை மற்றும் அன்பு. தேவனிடமிருந்து உண்மையான வெளிப்பாட்டை பெற்றுக்கொள்ளும் எவரும், அந்த அனுபவத்தின் விளைவாக

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

அதிகமான தாழ்மையோடிருப்பார்கள். உண்மையான தேவ அறிவு ஆத்துமாவிற்கு நேராக தாழ்த்துவதாயிருக்கும்.

5. கண்கவர் வழிநடத்துதல், அறிவுரைகளில் முரண்பாடின்றி சீராயிருக்க வேண்டும். வேறுவிதமாக சொல்ல வேண்டுமானால், அது தொடர்ந்து மாற்றப்படாமலும், முரண் பாடில்லாமலுமிருக்க வேண்டும்.
6. கண்கவர் வழிநடத்துதல், அந்தப் பாத்திரத்தை தனிமைக்கு நடத்தக் கூடாது. மாறாக, கிறிஸ்துவின் சரீரம் பக்திவிருத்தி அடைய நடத்த வேண்டும்.
7. கண்கவர் வழிநடத்துதல், வியாபாரமயமாக்கப்படக்கூடாது. ஆவியானவரின் ஆழ மான காரியங்கள் ஏனோதானோவென்று பகிர்ந்துகொள்ளப்படக்கூடாது. வாயில் சொல்லப்படக் கூடாத ஆவியானவரின் காரியங்களைப்பற்றி பவுல் பேசுகிறார் (2 கொரி. 12:4).
8. ஒரு பாத்திரத்திற்கு கொடுக்கப்பட்ட கண்கவர் வழிநடத்துதல், ஐந்துவகை ஊழியங் களில் நிற்கும் மற்ற பாத்திரங்கள் கொண்டுவரும், மற்ற எல்லா வழி நடத்துதல் களோடும் இசைவாயிருக்க வேண்டும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

## அத்தியாயம் 5

# வழிநடத்துதலில் சமச்சீர் நிலை

வழிநடத்தப்படுதலில் சமச்சீருள்ளதை கவனிப்பது நமக்கு மிகவும் முக்கியமானதாகும். சபை சரித்திரத்திலுள்ள ஒவ்வொரு தேவ அசைவாடுதலும், முதலில் துர் உபதேசம் என்று எண்ணப்பட்ட ஒரு வெளிப்பாட்டில் ஆரம்பமானதே. மார்டின் லூத்தர் கத்தோலிக்க திருச் சபையால் துர் உபதேசக்காரராகவே கருதப்பட்டார். பெந்தெகொஸ்தே இயக்கமும் அதன் ஆரம்ப நிலைகளில், துர்உபதேசமாகவே கருதப்பட்டது. கிறிஸ்தவமும் கூட, பவுலின் காலத் திலிருந்த பரிசேயர்களால், யூதாயிசத்தின் துர்உபதேச கிளையாகவே முதலில் கருதப்பட்டது. தற்கால திருச்சபை விடுதலையடைய வேண்டிய மிக முக்கியமான காரியம் பாரம்பரியமே.

### *பாரம்பரியமும் வெளிப்பாடும்*

பாரம்பரியம்தான் இயேசுவை சிலுவையில் அறைய யூதரை நடத்தியது. பாரம்பரியம்தான் சபையின் முதலாவது எருசலேம் ஆலோசனை மற்றத்தை கூட்டச் செய்தது. புறஜாதிகள் யூதமதபாரம்பரியங்களை கைக்கொள்வதின் கேள்வியை ஆதிகிறிஸ்தவர்கள் தீர்த்து வைத்தார்கள். ஒரு யூத குழுவினர் அப்படிச் செய்துதான் ஆக வேண்டும் என்று மிகவும் கருத்தாயிருந்தபோதிலும், புறஜாதிகள் மேல் அது திணிக்கப்படவில்லை, தேவனுக்கே ஸ்தோத்திரம் (அப். 15:5).

இயற்கை உலகத்திலே வித்தியாசமாக யோசிக்க உறுதிகொண்டவர்கள், புதிய உபகரணங்களையும் வாகனங்களையும் கண்டுபிடித்த ஆண்கள் மற்றும் பெண்கள் மூலமாக, உலக வரலாற்றின் போக்கே மாறினதை நாம் காண்கிறோம். அவர்களில் அநேகர், பாரம்பரிய யோசனையாளர்களால் சவால்களையும் எதிர்ப்புகளையும் சந்தித்தனர். விஞ்ஞானி களும், கண்டுபிடிப்பாளர்களும் தொழில் முனைபவர்களும்தான், நாம் இப்பொழுது அறிந் திருக்கிற உலகத்தை உருவாக்க உதவியவர்கள். மருத்துவ மற்றும் விஞ்ஞான துறைகள், தங்களது புதிய வழி சிந்தனைகளுக்கு அதிருப்தியையும் புறக்கணிப்பையும் பெற்றுக் கொண்ட மனிதர்களின் வாழ்க்கை சரிதைகளால் நிறைந்திருக்கின்றன. நிகொலஸ் கோபர்நிகஸ் பூமி சூரியனை சுற்றி வருகிறது என முதலில் சொன்னபோது, அந்த நாட்களில் இருந்த எல்லா விஞ்ஞான சமுதாயத்தாலும் பரிகசிக்கப்பட்டார். யார் சரி யார் தவறு என்று இன்று நாம் அறிந்திருக்கிறோம்.

ஆவிக்குரிய மண்டலத்திலும், அப்போஸ்தலர் நடபடி புத்தக நாட்களிலிருந்து, இயேசு கிறிஸ்துவின் திருச்சபை, நீண்ட வழியில் வந்திருப்பதை நாம் காண்கிறோம். தேவனுடைய அநேக மகாபெரிய உபதேசங்கள், முன்பு கருகளாகக் காணப்பட்டன, ஆனால் இப்போது தெளிவாகக் காணப்படுகின்றன. புத்தம் புதிய வெளிப்பாடுகள் ஒவ்வொரு புதிய தலைமுறையிலும் கொண்டு வரப்பட்டன. கிறிஸ்துவின் சரீரத்திற்கு படிப்படியாக முன்னேறும் வெளிப்பாடுகளை கொண்டு வந்த ஒவ்வொரு தலைமுறைக்கும் சொந்தமான ஐந்துவகை ஊழியங்களிருக்கின்றன. சிலர் உபத்திரவப்படுத்தப்பட்டனர். சிலர் வெளிப்பாடு களுக்காக கொலை செய்யப்பட்டனர். ஆனால் அந்த சத்தியம் இன்னும் வாழ்ந்துவருகிறது.

### *தேவசத்தியங்களில் சமச்சீராயிருப்பது*

நாம் இப்போது கிறிஸ்தவினுடைய வருகையின் வாசலில் நிற்கிறோம். நமக்கு பின்னால் உள்ள சபை சரித்திரத்தை நன்றாக காணும் ஒரு இடத்தில் உள்ளோம். தேவ சத்தியங் களின் வித்தியாசமான அம்சங்களை, தைரியமாக வெளியே கொண்டுவரும் தேவ மனிதர் களும் மனுஷிகளும் நமக்குத் தேவை. எல்லா சத்தியங்களின் முழுமையான வெளிப்பாட்டை யும் பரிசுத்த ஆவியானவர் கொண்டுவரும் நாட்கள் இந்த நாட்கள்தான். சபை சரித்திரத்தின்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

உச்சக்கட்டத்தில் நாம் இருக்கிறோம். கிறிஸ்துவின் சரீரமானது தேவ குமாரனின் அறிவை அறிந்துகொள்ள வேண்டும். கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்கதாக பூரண புருஷ நிலையை அடைய வேண்டும் (எபே. 4:13).

ஆனால் அதே நேரத்தில், ஒரு சத்தியம் வெளிப்படுத்தப்படும்போது, அதன் அப்பியாசங் களில் ஒரு புறச்சாய்வுகளை நாம் பார்த்திருக்கிறோம். மிகவும் அதிக வைராக்கியம் கொண்ட கிறிஸ்தவர்கள், வெளிப்பாட்டினை அப்பியாசிப்பதில் இயற்கைக்கு மாறாக, ஒருபுற செய்வுக்குத் தள்ளியுள்ளதை, சபை சரித்திரத்தில் நிறைய காணமுடியும். எல்லா வெளிப்பாடு களுக்கும் தேவன் நியமித்துள்ள மட்டுப்பாடுகளை மீறி, அவர்கள் போகிறார்கள் – எழுதப்பட்ட வார்த்தையின் எல்லைகள். வேதத்திற்கு அப்பாற்பட்ட வெளிப்பாட்டை உரிமை கொண்டாடி, அவர்கள் நடுமைய கிறிஸ்தவத்திலிருந்து உபகலாச்சாரங்களை உற்பத்தி செய்கின்றனர். இன்று நாம் பின்நோக்கி பார்த்து, அவர்களை கிறிஸ்தவத்தின் துர் உபதேசக்காரர்களாக காண்கிறோம்.

மனந்திரந்திருப்பதற்கும் இணக்கமில்லாதிருப்பதற்கும், வெளிப்பாட்டிற்கும் பாரம்பரியத் திற்கும், நிலையற்று மாறிக்கொண்டிருப்பதற்கும் ஸ்திரத்துவத்திற்கும், ஆகிய இவைகளுக் கிடையே உள்ள சமச்சீர் நிலையை கிறிஸ்தவம் அறிந்துகொள்ள வேண்டும். பாரம்பரியத்து வத்தினால் கட்டப்பட்டிருப்பவர்கள், தங்களது பாதுகாப்பின் ஜமுக் காளத்தை போட்டுவிட தைரியமுள்ளவர்களாயிருக்க வேண்டும். புதிய வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொள்கிறவர்கள், அவைகளை தேவ சபையில் செய்படுத்தும் வரையில், இயற்கைக்கு அப்பாற்பட்ட பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும். சத்தியத்தின் பக்கத்திலே நேரம் இருக்கிறதென்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். நீண்ட நேரம் ஆக ஆக, அது தெளிவடைந்து அதன் 'சரியாயிருப்பதன் தன்மை' உறுதியடைகிறது.

*தேவனுடைய நடத்துதல்களுக்கு நமது அறியும் ஆற்றலை பெருக்குதல்*

தேவன் நமக்கு அதிக வெளிப்பாட்டை பகிர்ந்தளிக்கும் முன்பு, அவர் நமக்கு வெளிப்படுத்திய வெளிப் பாட்டின் நிலைகள் எதுவானாலும், அது வரைக்கும் நாம் உண்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். உள்ளான சாட்சியின் நடத்துதல்களுக்கு உணர் வுள்ளவர்களாயில்லாத பட்சத்தில், மற்ற வெளிப்படுத்துதல்களை தேவன் வெளிப்படுத்து வதென்பது அரிதானதே. தேவ வெளிப் பாடுகளை நாம் பயத்தோடும் நடுக்கத்தோடும் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில், வெளிப்பாடு எவ்வளவு பெரிதாயிருக்கிறதோ, அவ்வளவுபெரிய ஒரு பொறுப்பும் அதற்கு அவசியமாகிறது.

பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுவதற்கு, நமது ஆற்றலை பெலப்படுத்த, பின் வருபவைகள் வழிகளாயுள்ளன:

1. மணிக்கணக்கில் அந்நிய பாஷையில் ஜெபித்தல்.
2. வேத வார்த்தையை தியானித்தல்.
3. ஆவிக்குரிய சகோதர சகோதரிகளோடு ஐக்கியம்.
4. தனிப்பட்ட முறையிலும், மற்றவர்களோடு சேர்ந்து பொதுவாகவும் ஆராதித்தல்.
5. நாள் முழுவதும் சங்கீதங்களையும், ஞானப்பாட்டுகளையும் ஆவிக்குரிய பாடல்களையும் பாடுதல்.

தேவனோடு எனது ஆவிக்குரிய வாழ்வை பராமரித்துக்கொள்ள மேற்கண்டவைகளை பயனுள்ளவைகளாக நான் கண்டறிந்தேன். மேலும் எத்தனைபேர்கள் பரிசுத்த ஆவியான வரால் நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள் (ரோம. 8:14). பரிசுத்த ஆவியானவர் நடத்துகிற புதிய காரியங்களில் தைரியமாக கடந்து செல்லுங்கள்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

*ஆவியானவரால் வழிநடத்தப்படுகிற அனுபவம்*

பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுவதென்பது, இந்த உலகத்தின் நதிகள், ஏரிகள், கடல்கள், சமுத்திரங்கள் வழியாக பிரயாணம் செய்வதில், வழிநடத்தப்படுவதைப் போன்றது. தேவ வார்த்தை என்ற படகு மாத்திரமே, நமது பிரயாணம் முழுவதிலேயும் நம்மை தாங்கிச் செல்லக்கூடியது. நமது பிரயாணத்தில் மலிந்துகிடக்கும் கஷ்டங்களுக்கு எதிராக, தேவ வார்த்தை என்ற படகு மாத்திரமே வரமுடியும். ஆழமான சமுத்திர பிரயாணங்களில் வரும் கொடுமையான புயல்காற்றுகளில் வெற்றிகொள்ள, தேவ வார்த்தை என்னும் படகு மாத்திரமே எதிர்த்து நிலைநிற்க முடியும்.

நான் ஒரு இளம் கிறிஸ்தவனாயிருந்தபோது, கிறிஸ்துவர்கள், "தேவன் என்னோடு பேசினார், சொன்னார்..." என்பதை அடிக்கடி கேட்டிருக்கிறேன். அவர்கள் தேவ சத்தத்தை கேட்க முடிவதையும் அவரால் வழிநடத்தப்படுவதையும் ஆகிய கூற்றுகளால், நான் எப்பொழுதுமே வசீகரிக்கப்பட்டிருக்கிறேன். 'தேவன் சொன்னார்' என்பதன் பொருள் என்ன என்பதை எனக்கு விளக்கிச் சொல்லுங்கள் என்று அப்படிப்பட்ட கிறிஸ்தவர்களிடம் நான் கேட்டபொழுதெல்லாம், அவர்களது பதில்களால் நான் ஏமாற்றமடைந்தேன். சிலர் அதை 'எண்ணப்பதிவுகள்' என்று சொன்னார்கள். மற்றவர்கள் தங்கள் காதுகளால் சத்தத்தை கேட்டதாக சொன்னார்கள். ஒரு நாளில் நான் தானாகவே அறிந்துகொள்வேன் என்று இன்னும் மற்றவர்களும் சொன்னார்கள்.

இப்படிப்பட்ட என்து நம்பிக்கையற்ற நிலையில், நான் அவரால் வழிநடத்தப்பட, கர்த்தர் அவரது சத்தத்தை எனக்கு போதிக்க நான் கதறினேன். வேதத்திலுள்ள தேவ மனிதர்கள் எல்லாருடைய இரகசியத்தையும் நான் அறிந்துகொண்டேன். அது என்னவெனில், தேவ சத்தத்தை கேட்கும் அவர்களது திறனே. மெதுவாகவும் ஆனால் மென்மையாகவும், ஆண்டவர் பதில் எனக்கு காண்பிக்க ஆரம்பித்தார். 'கர்த்தருடைய வார்த்தை சொன்னது' அல்லது 'கர்த்தர் சொன்னார்' என்று சொல்லும் வேதத்தின் ஒவ்வொரு வசனங்களும், மனித காதுகளுக்கு கேட்கும் சத்தமாக இருக்க வேண்டிய அவசியமில்லை யென, முதலாவது அவர் எனக்கு போதித்தார். அந்த வெளிப்பாட்டின் பரவசம் பல மாதங்கள் தொடர்ந்து இருந்தது.

'அவள் சொன்னள்' என்று அன்னாளின் முழு ஜெபமும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அது உண்மையாகவே தேவனை நோக்கி, அவள் நினைத்த உள்ளான ஒரு எண்ணமே (1 சாமு. 1:11–13). அது இடியைப்போல என்னைத் தாக்கியது. அன்னாளின் ஜெபம் உண்மையாகவே அமைதியாக செய்யப்பட்டிருந்தாலும், வேதம் அதை இவ்வாறு பதிவு செய்திருக்குமானால், வேதத்திலுள்ள மற்ற அநேக பதிவுகளில் 'சொன்னார்' என்று எழுதப்பட்டிருக்கும் இடங்கள், விசேஷமாக அவைகள் தேவன் பேசினதாயினும், மனித காதுகளுக்கு அவைகள் அமைதலாகவே இருந்திருக்கும்.

எனது பக்திவிருத்திக்காக நான் வேதத்தைவாசிக்கும் போது, ஆண்டவர் காண்பித்த இரண்டாவது காரியமென்னவெனில், கிறிஸ்துவின் சிந்தை எங்களுக்கு உண்டாயிருக்கிறது என்று வேதம் சொல்லும்பொழுது, கிறிஸ்தவின் எண்ணங்களை கொண்டிருப்பது என்பதை அதை உள்ளடக்கியுள்ளது. இன்னுமொரு இடியைப் போல அது என்னைத் தாக்கியது. விசேஷமாக, எனது ஆவிக்குரிய வாழ்விற்கு உதவின, நான் பெற்றுக்கொண்ட சில எண்ணங்கள், பரிசுத்த ஆவியானவர் என்னோடு பேசின சத்தமே. பரிசுத்த ஆவியானவரின் சத்தத்திற்கும் மனித ஆவியின் சத்தத்திற்கும் உள்ள வித்தியாசத்தையும் மற்றும் உள்ளான சாட்சியின் ஐந்து உணர்வுகளுக்குமுள்ள வித்தியாசத்தையும், நான் அறியாதிருந்தேன். ஆனால், ஆண்டவர் எனது எண்ணங்களில் பேசி நான் கேட்டதை, நான் உணராமலிருந்த உண்மையினாலும் பரவசத்தினாலும் நான் ஆட்கொள்ளப்பட்டேன்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

மிகவும் வியத்தக்க விசயமென்னவெனில், அது மிகவும் எளிமையானதாயினும் நான் அதை தவறவிட்டதுதான். The Living Bible முதலாம் கொரிந்தியர் 2:16ஆம் வசனத்தை 'கிறிஸ்துவின் எண்ணங்கள் எங்களுக்கிருக்கின்றன' என்று மொழிப்பெயர்த்திருக்கிறது. ஒவ்வொரு எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குள் சிறைப்படுத்த வேண்டும் என்று பவுல் அறிவுறுத்தியதை திடீரென்று விளங்கிக்கொள்ள ஆரம்பித்தேன் (2 கொரி. 10:5). சிந்தை மற்றும் எண்ணங்களை குறித்து பேசும் ஒவ்வொரு வேதவாக்கியத்தையும் நான் ஆராய்ச்சியே செய்தேன். தேவன் உருவாக்கிய சிந்தையின் நோக்கம் மற்றும் காரணத்தைப் பற்றி தேவன் என்னோடு பேசிய சத்தியங்கள், என்னை மெய்சிலிர்க்கச் செய்தன. பரிசுத்த ஆவியானவர் எல்லாவற்றையும் நமக்குப் போதித்து, இயேசு பேசின எல்லாவற்றையும் நமது ஞாபகத்திற்கு (எண்ண தொடர் செயல்கள்) கொண்டு வருவார் (யோவா. 14:26).

### *சிந்தையின் முக்கியத்துவம்*

சிந்தை என்பது ஆவி உலகத்திற்கும் இயற்கை உலகத்திற்கும் உணர்வுள்ள ஒரு உபகரணமாகும். இது சிருஷ்டிப்பின் ஒரு அதிசயமாகும். உண்மையாகவே, பாவத்தில் விழுந்த சிந்தை, பலன்தரும் முழு திறனையும் பெற்றுக்கொள்ள முடியாது. ஆனால், சிந்தையைப் புதுப்பிப்பதின் விளைவாக, மிகப்பெரிய நற்சீர் நிலைக்கு திரும்ப கொண்டுவர முடியும். ஆவி மண்டலத்தில் சிந்தை என்பது பெற்றுக்கொள்ளும் உபகரணமும் (ஒலி, ஒளி) பரப்பும் உபகரணமுமாகும். சோதனைகள் வரும்போது பாதிக்கப்படும் முதல் இடம் இதுதான். எல்லா சோதனைகளும் சிந்தைக்குத்தான் முதலாவதாக வருகின்றன. முற்போக்காக, தேவன் புதுப்பிக்க நாடும் முதல் இடமும் இதுதான். சிந்தையை புதுப்பித்தல் எவ்வாறு சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதை கவனிக்கவும் (ரோம. 12:2).

எனக்கு கிடைத்த மூன்றாவது மிகப்பெரிய கண்டுபிடிப்பு என்னவெனில், சிந்தனை என்பது பெற்றுக்கொள்ளும் உபகரணமாக மட்டும் வடிவமைக்கப்பட்டுள்ளதல்ல. எல்லா மனித சிந்தனைகளும் உண்மையாகவே பெற்றுக்கொள்ளும் உபகரணமாகவும், புள்ளி விவர வகைப்படுத்தும் உபகரணமாகவுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. எனது எண்ணங்கள் மற்ற நபரையும் வாழ்வையும் எப்படியாயினும் பாதிக்க முடியும் என்பதை தேவன் எனக்கு காண்பிக்க ஆரம்பித்தபோது, நான் மெய்சிலிர்த்துப்போனேன். நாம் Telepatty (ஒரு சிந்தையிலிருந்து இன்னொரு சிந்தைக்கு பேச்சு மற்றும் சமிக்ஞையின்றி கருத்தறிவித்தல்) பற்றி பேசவில்லை. ஆனால் நமது எண்ணங்கள் சுமந்து செல்லும் ஆவிக்குரிய செல்வாக்கைப்பற்றியே பேசுகிறேன். நமது செயல்களாலும் பேச்சினாலும் நாம் அறிந்தோ, அறியாமலோ மற்றவர்கள் மீது செல்வாக்கை செலுத்துகிறோம். உண்மை என்னவெனில், நாமும் நமது எண்ணங்களால் மற்றவர்களை பாதிக்கிறோம். சீஷர்கள் தவறான எண்ணங்களை ஒலிபரப்பும் சூழ்நிலைக்கு இயேசு உணர்வுள்ளவராயிருந்தார் (லூக். 24:38).

ஒவ்வொரு மனிதனுடைய சிந்தனையும் உலகளாவிய முக்கியத்தவம் பெறுகின்றன. ஒவ்வொரு தீய எண்ணமும் அந்த மனிதனை பாழ்படுத்துவதோடு, உலகத்தையும் கேடாக்கி, நரகத்திற்கு தள்ளுகிறது. ஒவ்வொரு நல்ல எண்ணமும் அந்த மனிதனை ஆசீர்வதிப்பதோடு, முழு உலகையும் மோட்சத்திற்கு நேராக உயர உந்தித்தள்ளுகிறது (இந்த எல்லா மொழி உருவகங்களும், அதன் சூழ்நிலையில் அர்த்தம் கொள்ளப்பட வேண்டும்). எல்லா தீமையின் மூலாதாரமும் எண்ணங்களில்தான் உள்ளது என்று இயேசு அறிந்து மலைப்பிரசங்கத்தில் அதற்கேற்றப்படியே பேசினார் (மத். 5:21, 22, 27, 28).

அநேக மக்களின் எண்ணங்கள் தாழ்ந்த திறன் ஒலிபரப்பு நிலையத்தைப்போல உள்ளன. பயிற்சியினாலும் தேவ வார்த்தையின் தியானத்தினாலும், நாம் நமது எண்ணங்களை வலுவாகவும் செயலூக்கமுடையதாகவும் மாற்ற முடியும்; ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை முழு உலகமும் ஏற்றுக்கொள்ள செல்வாக்குள்ளதாக்கலாம். எண்ண வாழ்க்கையைப் பற்றி

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

வேதம் என்ன சொல்கிறது என்பதை பற்றி, ஒரு ஆராய்ச்சியை மேற்கொள்ளுங்கள். அது தேவனுக்கு எவ்வளவு முக்கியத்துவம் என்பது, உங்களை மெய்சிலிர்க்கச் செய்யும்.

இந்த வாழ்க்கையில் நாம் பெற்றுக்கொள்ளும் அநேக நடத்துதல்கள், நமது உள்ளான சாட்சி மற்றும் நமது மனித ஆவி மூலமே இருக்கின்றன. ஊழியத்தில் நாம் பெற்றுக் கொள்ளும் அநேக நடத்ததல்கள், நமது உள்ளான சாட்சியோடும் மனித ஆவியோடும் இணைந்து பரிசுத்த ஆவியாவரின் சத்தம் செயல்படுவதாகும். பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படும் மற்ற அமைப்புகள், விசேஷமான நேரங்களுக்காக முன்பதிவு செய்யப் படுகின்றன. எனினும் ஒரு நபர் குறிப்பிட்ட ஒரு ஊழிய நிலையில் நிற்பது, அவர் மேலுள்ள செயல்படும் தேவ கிருபையை சார்ந்து, ஒரு குறிப்பிட்ட நடத்துதலை தொடர்ந்து உறுதியாக வெளிப்படுத்தும். எனினும் அது ஆவியானவர் விரும்புகிறதை சார்ந்து இருக்குமே அன்றி, அந்த நபர் விரும்புகிறபடி இருக்காது.

பரிசுத்த ஆவியாவனரால் நடத்தப்பட கற்றுக்கொள்வதென்பது, திடீரென்று வரும் அனுபவமல்ல. அது கொஞ்சம் கொஞ்சமாக வளரும் மற்றும் பயிற்சியின் தொடர் செயல் ஆகும். நீங்கள் தவறுகளை செய்தால், சோர்ந்து போய்விட வேண்டாம். தொடர்ந்து செல்லுங்கள். தேவனிடம் மன்னிப்பு கேளுங்கள். தவறவிட்டதை ஒத்துக்கொண்டு, அந்த இடத்திலிருந்து முன்னேறுங்கள். பயிற்சியே பரிபூரணத்தை உண்டாக்கும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 